834

834/3-57

ஸ்ரீ பர்வத வர்த்தனி

ஆசிரியர்: V. M. நடேச நாட்டார்

மலர் 1	ஹேவிளம்பி ஆவணித் திங்கள் ஆகஸ்ட் 1957	இதழ் 12

பொருளடக்கம் — பக்கம்

1. சென்னை ராஜ்ய மீன்வள ஆலோசனை போர்டு ... 347
2. பாராட்டுக் கூட்டம் ... 350
3. சந்தா நேயர்கள் கவனிக்க ... 351
4. நன்றி அறிவிப்பு ... 351
5. திருக்குறள் ... 352
6. காதல் ... 354
7. இரத்த தானம் வாழ்க! ... 355
8. வைத்தியம் ... 360
9. யார் பெற்ற செல்வம்! ... 363
10. இன்ப வாழ்க்கை ... 371
11. "தேசிங்கு ராஜன்" ... 373

OFFICE OF THE REGISTRAR OF ...
2 - SEP 1957
MADRAS

JL
ണ21, N56 SP
M57.1.12
187255

சென்னை மாகாண
ராஜகுலசங்கம்
மாத வெளியீடு

விலை 4 அணா

எல்லாவிதமான கைத்தறி ஜவுளிகளும்,

மில் ஜவுளிகளும், பல ரகங்களிலும்

விலை நயமாகக் கிடைக்கு மிடம் :-

V. K. வேதகிரி நாட்டார் &

V. J. முனிரத்தின நாட்டார்.

மில் மேட் & கைத்தறி ஜவுளி வியாபாரம்

விரிஞ்சிபுரம். (N. A. DT.)

குறைந்த விலை! *கறார் விலை!!*

சர்வ விசேஷங்களுக்கும், சுப முகூர்த்தங்களுக்கும்

உங்களுக்கு வேண்டிய ஆடைகளுக்கு

ஸ்ரீ லெக்ஷிமி விலாஸ்

ஜவுளி மாளிகைக்கு விஜயம் செய்யுங்கள்

புத்தம் புதிய ரகங்கள்! உள்ளங்கவரும் ஆடைகள்!

உத்திரவாதமுள்ள ஜவுளிகள்!

பல்லாயிரக்கணக்கான ரகங்களில், உயர்தரமான பட்டு மில் & கைத்தறி ஜவுளி தினுசுகள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

தங்கள் வருகையால் பெரிதும் மகிழ்வு அடைவீர்கள் என்பது திண்ணம்.

அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யக்கோருகிறோம்.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

அன்பன்

வீ. ப. சிவஞானம் நாட்டார்,

ஜவுளி வியாபாரம், காட்டுமன்னார்குடி.

உ

பராசக்தி துணை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வத வர்த்தனி

"எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 1	ஹேவிளம்பி ஆவணித் திங்கள் ஆகஸ்ட் 1957	இதழ் 12

சென்னை ராஜ்ய மீன்வள ஆலோசனை போர்டு

மீனவ் மக்களை உறுப்பினராகக்கொண்ட மீன்வள ஆலோசனை போர்டை நியமிப்பது, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு மீனவர் க்ஷேமநல அதிகாரி (District Welfare Officer)யை நியமிப்பது, மீனவர்களின் பொருளாதார, சமூக, கல்வி நிலையை அறிவதற்கு விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பது, சட்டசபையில் தொழில் அடிப்படையில் ஒரு ஸ்தானத்தை ஒதுக்குவது முதலிய பல விஷயங்களைச் சுமார் 25 ஆண்டுகளாக அரசியலாரை வற்புறுத்திக்கொண்டே வந்ததுமல்லாமல் தீர்மானங்கள் மூலமாகவும் அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகின்றோம். இவ்வளவிற்கும் இடையில் சென்ற 2 மாதங்களுக்குமுன் மீனவ மக்கள் அறுவரும் அதிகாரிகள் அறுவருமாகப் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட மீன்வள ஆலோசனை போர்டு, ஸ்தல ஸ்தாபன மீன் இலாக்கா அமைச்சர் கனம், லூர்து அம்மாள் சைமன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டது. இத்துணை ஆண்டுகள் கழிந்து இதையேனும் அமலுக்குக் கொண்டுவந்த அரசியலாருக்கு எமது மீனவமக்களின் சார்பாக மனமுவந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம்.

மேற்க ஷ்டி மீன்வள ஆலோசனை போர்டின் முதல் கூட்டம் 23-8-1957 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குச் சென்னை செக்ரடேரியட்டில் கனம். லூர்து அம்மாள் சைமன் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இச்கூட்டத்தைத் துவக்கிவைத்த கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் சுவையுள்ள மீன் வளங்கள் அபிவிருத்திக்கான திட்டங்களை விவரித்துப் பேசினார்கள். அதன் சுருக்கம் வருமாறு :

"மீன் வளத்துறை 50 ஆண்டுகளாக இருந்துவருகிறதென்ரு லும்பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டி அதிகார சார்பற்றவர்களேயும் இதில் சேர்த்துக்கொள்ள இப்போது தான் முதல் தடவையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மீன் துறையின் ஆராய்ச்சிகள் அனுபவங்களையொட்டி மீன் வள அபிவிருத்தி, குறிப்பாக நாட்டுப் படகுகள் அபிவிருத்தி மீனுக்கு மார்க்கெட் வசதிகள் விஸ்தரிப்பு, மீனவர்களிடையே கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்துதல் அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிசெய்தல் முதலியவைகளில் இந்த போர்டு அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் கூறும்.

இந்த ராஜ்யத்தில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பொருளாதார நிலையில் மிகப் பின்னடைந்திருக்கிருர்கள். சென்னையில் சுமார் 600 மைல் நீளம் கடற்கரை உள்ளது. உள்நாட்டு நீர்நிலைகள் சுமார் 4 லட்சம் ஏக்கர் பரப்புள்ளன. இதனுல் மீன்வளம் மிகுதியாக உடையது என்பதை விளக்கவேண்டியதில்லை. ஆனுல் தற்போது ஆண்டு ஒன்றுக்குக் கடல் மீன் 60,000 டன்களும், உள்நாட்டு மீன் 38,000 டன்களும் கிடைக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு தனி நபர் உட்கொள்ளும் மீனின் அளவு 10.5 ராத்தல்கள். இது இதர பல நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவு ஆகும். தென்னிந்தியர் சாப்பாடு புரதச்சத்து மிகவும் குறைந்தது. மீனை அதிகம் பயன்படுத்தினுல் பொதுமக்களின் உடல் நலத்தில் முன்னேற்றம்காண இடமேற்படும். இதனுல் தேசிய வருமானமும், உடல் நலத்தின் தரமும் அபிவிருத்தியாகின்றன.

மீன் உற்பத்தி அதிகரிப்பு, இத்துடன் பிணைப்புள்ள தொழிலை ஊக்குவிப்பது, புதிய முறைகளைப் புகுத்துவது, நவீன படகுகளைப் பிரபலப்படுத்துவது, விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சி முடிவுகளை நடைமுறையில் கொண்டுவருவது, மீன்மார்க்கெட் வசதிகளை அபிவிருத்திசெய்வது, மீனவர் வாழ்க்கைநிலை அபிவிருத்தி ஆகியனவே மீன் துறையின் நடவடிக்கைகளின் நோக்கமாகும்.

இந்தக் குறிக்கோள்களை அடைய உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் அபிவிருத்திக்காக குறுகிய காலத்தில் நல்ல வளர்ச்சியடையும் மீன் வகைகளின் குஞ்சுகளைச் சேகரிக்கவும், வினியோகிக்கவும் வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மேட்டூர், பவானி சாகர் போன்ற தேக்கங்ளில் மீன் சேகரிப்பு, ஏற்ற முறையில் லைசென்ஸ்கொடுத்தல் முதலியன மூலம் மீன்வள ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடலில் மீன் பிடிப்பதைப் பொறுத்தவரை ஏற்கனவே சர்வே செய்யப்பட்ட பகுதிகளில் மீன் பிடித்தலை மேற்கொள்ளுவதும் தற்போது மீன் பிடிக்கும் இடங்களில் இன்னும் அதிகமாகப்

187255

பிடிக்க வகைசெய்வதும் அவசியம். சமீபத்தில் கடலூர் சமூக மீன் வளம் மிகுந்த பகுதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. கன்னியாகுமரி ஜில்லாவுக்காக மீன் துறை துணை டைரக்டர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. யந்திரப்படகுகள் திட்டம் 1955—56-ல் மேற்கொள்ளப்பட்டு 20 'பாப்லோ' ரகப் படகுகள் கட்டப்பட்டன. 1956—57-ல் மேலும் 11 கட்டப்பட்டன. 1957—58-ல் மேற்கொண்டு 15 படகுகள்கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. உலர்த்தப்பட்ட இறால்கருவாடு உற்பத்திக்காக 1956-57-ல் தஞ்சை ஜில்லாவில் நாகைப்பட்டினத்தில் ஒரு நிலையம் துவக்கப்பட்டுள்ளது. 1957—58-ல் 20 அந்தர் உற்பத்தி திறனுள்ள மீன் எரு, மீன் எண்ணெய் தொழிற்சாலையை தூத்துக்குடியிலும், மற்றொரு தொழிற்சாலையை நாகப்பட்டினத்திலும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது,

குறைந்த செலவில் மீன் நிபுணர்களின் சேவைகளைப் பெறவும், கருவிகளைப் பெறவும், அயல்நாடுகளின் உதவித் திட்டங்களை அரசாங்கம் நன்கு பயன்படுத்திக்கொண்டது. ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனத்துடன் ஒப்பந்தம்செய்து நிபுணர்களைப் பெற்றுள்ளது. அடையாறு அருகில் மீன்பண்ணை, ராயபுரத்தில் ஒரு படகுகட்டும் தளம், மீன் துறைமுகம் ஆகியன ஏற்படுத்தும் விஷயம் தீவிர பரிசிலனையில் இருக்கிறது.

மீன் வளத்தின் பலவேறு அம்சங்கள்பற்றி ஆராய குருசடை தீவுகள், தூத்துக்குடி, பவானிசாகர், எண்ணூர், பூண்டி ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க மீன்வள ஆராய்ச்சி நிலையங்கள் நல்ல பணியாற்றி வருகின்றன. தூத்துக்குடியில் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் ஏற்பட்டுள்ளன.

மீனவர்கள் பழைய கடன்களை அடைக்கவும், கருவிகளை வாங்கவும் 134 மீனவர் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் 1956—57-ல் சுமார் 832 மீனவர்களுக்கு நீண்டகால கடன்கள் ரூ. 2.70 லட்சம் வழங்கப்பட்டது. 1957—58-ல் ரூ. 4 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 17 மீன் பதனதளங்கள் ஏற்படுத்தப்பட்டு குறைந்த விலையில் உப்பும் வழங்கப்படுகிறது. பக்கிங்காம் கால்வாயை அபிவிருத்தி செய்வதைக்குறித்து இந்திய அரசாங்கத்தின் போக்குவரத்து துறை ஆலோசித்துவருகிறது, மீனவர்களுக்கு வீடு வசதி என்னும் விஷயமாக ஹரிஜன க்ஷேமநல திட்டங்கள் கீழ் வீடுகள்கட்ட ரூ. 2.44 லட்சம் அனுமதிக்கப்பட்டிருப்பதில் ஒரு பகுதி மீனவர்களுக்குக்கிடைக்கும். ராயபுரத்தில் கடல் அரிப்பால் வீடிழந்த மீனவர்களுக்கு வீடு வசதிசெய்வதற்காக மனை இடங்கள் வாங்க ரூ. 2.59 லட்சத்துக்கும் வசதிகள்செய்ய ரூ. 1.55 லட்சம் செலவிடவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது".

ஆலோசனை போர்டின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முன்னமேயே பலவேறு தீர்மானங்களை எழுதி அனுப்பியிருந்தார்

கள். அவைகளில் பெரும்பாலான தீர்மானங்கள் ஆலோசனைக்கு வரவே இல்லை. உள்நாட்டு மீனவமக்கள் சம்பந்தமாக, நைலான் நூலை உபயோகிப்பது, வீடு கட்டித்தருவது என்ற 2 தீர்மானங்களைத் தவிர மற்றவைகள் ஒன்றும் வரவில்லை. உள்நாடு சம்பந்தமாக அடுத்த அக்டோபர் மாதத்தில் கூடும் கூட்டத்தில் கொண்டு வரப்பெறும் என்று அதிகாரிகள் வாக்குறுதியளித்தனர். மார்க்கெட் நிலவரங்களைப் பற்றியும், கருவாடுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிப்பதைப்பற்றியும் ஆலோசனை போர்டில் விவாதிக்கப்பட்டன. விற்பனை வரியைப்பற்றி கவனிப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். உள்நாட்டு மீனவர் சொசைட்டிகளுக்கு 5 வருட சராசரியின்மீது குத்தகை கொடுப்பது என்ற விஷயம் உள்நாட்டு மீனவர்களுக்கு ஜீவாதாரமான விஷயமாதலால் அடுத்த அக்டோபர் மாதத்தில் அவ்விஷயம் ஆலோசனைக்கு வரவேண்டும் என்றும் தவறினுல் இப்போர்டு எங்கள்வரை இல்லாததுபோல்தான் என்றும் வற்புறுத்தப்பட்டது. அக்டோபரில் அதைப்பற்றி ஆலோசிக்கலாம் என உறுதிகூறப்பட்டது. பின்னர் பல தீர்மானங்களை நிறைவேற்றியபின் மாலை 6 மணிக்கு இக்கூட்டம் இனிது முடிந்தது.

பாராட்டுக் கூட்டம்

சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கத்தினர்களால் அமைச்சர் கனம். லூர்து அம்மாள் சைமன் அவர்களையும், மீன்வள ஆலோசனை போர்டு மெம்பர்களையும் பாராட்ட 23—8—1957 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மார்டன் கேப் மேன்மாடியில் தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது. திரு. K. ஷண்முகம் B.A. B.L., அவர்கள் தலைமை வகித்தார். 'நீண்ட காலத்திற்குப் பின்னர் கல்விச் சலுகை அளித்தமைக்கும், மீன்வள ஆலோசனை போர்டு நியமித்ததற்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும், உள்நாட்டு மீனவர்களுக்குக் குத்தகைதரும் விஷயம் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதென்றும், அரசாங்கத்தார் மீன் இலாக்காவில் மீனவர்களுக்கு உத்திபோகம் தர வேண்டும் என்றும் நாம் யாவரும் ஒற்றுமையாயிருக்கவேண்டும்' என்றும் தமது முன்னுரையில் குறிப்பிட்டதோடு எல்லா மெம்பர்களுக்கும் நன்றிதெரிவித்தார்.

தூத்துக்குடி மீனவர் சங்கத் தலைவர் உயர்திரு. மச்சாடோ அவர்கள் "உள்நாடு கடற்கரை என்ற வித்தியாசம் இல்லாமல் இரு பிரிவினர்களும் ஒன்றுகவே இருந்து எல்லாப் பிரச்சினைகளையும் விவாதித்து வெற்றி பெறவேண்டும் என்றும், அரசாங்கம் நம்மைப் பல காலமாக ஏமாற்றி வருகிறதென்றும் நம் ஒற்றுமையாலேயே அவைகளைப் பெறமுடியும் என்றும் மீனவர் தொழிலின் அடிப்படையில் முன்னேற்றம் காணவேண்டும்" என்றும் கூறி

ஞர். உயர்திரு. N. ஜீவரத்தினம் அவர்கள் இருபிரிவினர்களின் ஒற்றுமையையும் தாம் நீண்ட காலமாக வற்புறுத்துவதாகவும், திரு. மச்சாடோ அவர்கள் அதை நன்ருக உணர்ந்திருப்பதாக வும், கனம் அமைச்சர் அவர்கள் மீனவ சமூகத்தின் முன்னேற்றத் தில் மிகவும் அக்கறை கொண்டுள்ளார்கள் என்றும் பேசினுர். கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் தாம் தம்மால் எவ் வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்யப் பின்வாங்கமாட் டேன் என்றும், நன்மைசெய்வதில் எந்த வேற்றுமையும் இல்லை யென்றும், ஒற்றுமையோடிருந்து கல்விகற்று மீனவ மக்கள் முன் னேற்றம் அடையவேண்டும் என்றும் கூறிமுடித்தார். பின்னர் திரு. C. பஞ்சாக்ஷரம் அவர்கள் நன்றிகூற பாராட்டுக் கூட்டம் இனிதுமுடிந்தது.

——(o)——

நன்றி அறிவிப்பு

23—8—57-ல் மீனவள ஆலோசனை போர்டு மெம்பர்களைப் பாராட்ட, சென்னை மார்டன் கேப் மாடியில் நடைபெற்ற விருந் துக்கும் பாராட்டுக் கூட்டத்திற்கும் மனமுவந்து நன்கொடை யளித்த பெரியார்களுக்கும், அதில் பங்கெடுத்துக்கொண்ட 5, 6 சொசைட்டிகளுக்கும் நேரில்வந்திருந்த அன்பர்களுக்கும் எங் கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனம்.

குறிப்பு:—எது எப்படி எங்கே நடந்தாலும் கொடுப்பவர்கள் கொடுத்துக்கொண்டே இருக்கட்டும்; கொடாதவர்கள் கொடாத வர்களாகவே இருக்கட்டும் என்பதையும் இச்சமயம் ஞாபகப் படுத்த விரும்புகின்ருேம்.

——

சந்தா நேயர்கள் கவனிக்க

பருவதவர்த்தனி ஆரம்பித்து ஒரு வருடம் முடிந்துவிட்டதை நேயர்கள் அறிவார்கள். இதுவரையில் சந்தாவைப்பற்றி எழுதாத மாதமே இல்லை. என்ன எழுதினுலும் நேரில் தெரிவித்தாலும் சந்தா வருவதில்லை. இதுவரை மூன்றில் ஒரு பாகந்தான் சந்தா வந்துள்ளது. இந்த அவலநிலை ஏனே தெரியவில்லை. சந்தாதாரர் கள் தாங்கள் தங்கள் சந்தாவை அனுப்பிவிடோமோ இல்லையோ என்ற ஞாபகம்கூட இல்லாமல் இருக்கின்ருர்கள் என்று தெரி கின்றது. சந்தாதாரர்களின் கவனக்குறைவை உத்தேசித்து அடுத்த இதழில் சந்தா செலுத்தாதவர்களின் பெயர்களைப் பர்வத வர்த்தனியில் பிரசுரிக்கவேண்டியதாய் இருக்கிறது. அவர்களாக அதைத் தெரிந்து கொள்ளாவிட்டாலும் அவர்கள் நண்பர்களா வது உறவினராவது அதைத்தெரிந்து அவர்களுக்குச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு பிரசுரிக்க முற் படுகின்ருேம். பர்வதவர்த்தனியின் வரவு செலவு கணக்குகளையும் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

திருக்குறள்

வித்வான் K. N.

12-ம் அதிகாரம்

நடுவு நிலைமை

அஃதாவது பகைவர், அயலோர், நட்பினர் என்னும் மூவகையோரிடத்தில் அறத்தினின்றும் வழுவாமல் சமமாய் நிற்கும் நிலைமை. இது நன்றி செய்தவரிடத்து அந்நன்றியை நினைத்தவிடத்து நடுவு நிலைமை கெடும். ஆகையால் அவ்விடத்தும் கெடலாகாது என்பதற்குச் செய்ந்நன்றி யறிதலின் பின் வைக்கப் பட்டது.

திருவள்ளுவர்

1. பகைவர் அயலோர் நட்பினர் என்னும் பிரிவுதோறும் தன் முறைமையைவிடாது நடக்கப்பெற்ருல் நடுவு நிலைமை யென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று.

இதனல் நடுவு நிலைமையது சிறப்புச் சொல்லப்பட்டது.

2. நடுவு நிலைமையை யுடையவனது செல்வமானது பிறர் செல்வம்போல் அழியாமல் அவன் சந்ததியார்க்கும் உறுதியாதலை உடையதாம்.

சந்ததியார்க்கும் உறுதியாதல் என்பதனுல்தான் சாமளவும் அழியாமல் உறுதியாகும் என்பது பெறப்படும். அறத்தோடு வருதலால் அப்படிப்பட்டதாயிற்று.

3. தீங்கன்றி நன்மையே தந்தாலும் நடுவு நிற்றலை நீங்கலால் உண்டாகின்ற செல்வத்தை அப்போதே ஒழியவிடுக.

நடுவு நிலைமை இல்லாமையால் உண்டாகும் செல்வம் நன்மையைத்தராது. இவை இரண்டு பாட்டாலும் நடுவு நிலைமையால் வந்த செல்வம் நன்மையைத் தருதலும் மற்றைச் செல்வம் தீமையைத் தருதலும் சொல்லப்பட்டன.

4. இவர் நடுவு நிலைமையையுடையவர் இவர் நடுவு நிலைமையை இல்லாதவர் என்னும் விசேஷம் அவரவருடைய நல்ல புதல்வரது இருப்பினுலும் இல்லாமையாலும் அறியப்படும்.

நடுவு நிலைமையை உடையவர்களுக்கு நல்ல சந்ததி உண்டாதலும் நடுவு நிலைமை இல்லாதவர்களுக்கு அஃது இல்லாமற்போதலும் நிச்சயமாதலின் அவ்விருவகையோர்களையும் அறிவதற்கு

அவை அடையாளங்களாயின. இதனால் நடுவு நிலைமை உடைய வர்களையும் அஃது இல்லாதோரையும் அறியுமாறு சொல்லப் பட்டது.

5. தீவினையினாலே கேடும் நல்வினையினாலே பெருக்கமும் முன்னமே ஒருவருக்கு அமைந்துகிடந்தனவே தவிர யாவருக்கும் இல்லாதவையல்ல; அவ்வழியை அறிந்து இப்போதைய முயற்சி யால் அவை வருவனவாக நினைத்துக் கேடு வாராமையைக் குறித் தும் பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒரு பக்கத்திலே சாயாமல் இருத்தல் அறிவால் நிறைந்தோர் (சான்றோர்)க்கு அழகாம்.

இதனால் கேடும் பெருக்கமும் ஆதற்குக் காரணம் பழவினையே என உண்மையுணர்ந்து நடுவு நிலையராயிருத்தல் அறிவுடையார்க்கு அழகாம்.

6. ஒருவன் தனது மனம் நடுவு நிலைமையிலிருந்து நீங்கிப் பக்ஷபாதங்களைச்செய்ய நினைக்குமாயின், அந்நினைவை நான் கெடக் கடவேன் என்று உணரும் உற்பாதமாக அறியக்கடவன்.

உற்பாதம் என்பது நன்மை தீமைகளை முன்னறிவிக்குங் குறி.

7. நடுவு நிலைமையிலிருந்து அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை உயர்ந்தோர் வறுமையாக நினைக்கமாட்டார்கள்.

8. முன்னே தன்னைச் சமனாகச்செய்து பின்னர் தன்னிடத்தே வைக்கப்பட்ட பாரத்தை அளவுசெய்யும் துலாக்கோல் போல இலக்கணங்களாலே நிறைந்து ஒரு பக்கத்திலே சாயாமையானது கல்வி அறிவால் நிறைந்த சான்றோர்க்கு அழகாம்.

சான்றோர் வாதிப்பிரதிவாதிகளிடத்து ஆட்சேப சமாதானங் களால் கேட்கப்பட்ட விஷயங்களை இயற்கை அறிவால் உள்ள படியுணர்ந்து பகைவர், நட்பினர் என்று மறைக்காமல் மூவகை யோருக்கும் ஒப்பச் சொல்லுவர்.

9. நடுவு நிலைமையாவது சொல்லினிடத்தே கோணுதலில் லாததாகும்; சொல்லில் கோணுதல் இல்லாமலிருப்பது மனத்தி னிடத்தே கோணுதலில்லாமையை உறுதியாகப் பெற்றால்.

அஃதாவது சபையார் வாயினாலே அறநூலில் விதித்தபடி சொல்லினும் தமது மனமானது ஒரு பக்கத்திலே சாய்ந்திருக்குமா யின் அச்சொல் நடுவு நிலைமையாகாதென்பது சொல்லப்பட்டது.

10. பிறர் பொருள்களையும் தம் பொருள்களைப்போல் காத்து வியாபாரம் செய்தால் அச்செய்கையானது வியாபாரம் செய் வார்க்கு நல்ல வியாபாரமாம்.

பிறர் பொருள்களையும் தம் பொருள்களைப்போல் காத்தலா வது கொள்வது அதிகமும் கொடுப்பது குறைவும் ஆகாமல் சம மாக நாடிச்செய்தல். இதனால் பிறர் பொருள்களையும் தம் பொருள் களைப்போற் செய்யும் நடுவு நிலைமையுடையவர்க்கு வாணிகம் நன் றாம் என்பது சொல்லப்பட்டது.

——o——

காதல்

(எழிலன் - காட்டுமன்னார்குடி)

தலைவி

கோடையிலே ஓர்நாள் நானும்
ஓடைநீர் ஆடும்போது எனை
தொட்டிழுத்து முத்தமிட்ட துடுக்குத்தனத்தை
திகட்டாத உள்ளத்தின் நிலையதனை
ஓடியே தோழிநீ உரைத்திடுவாய்
தேடியேநிற்கின்றேனத் தீந்தமிழின் வருகைக்காக.

தோழி

வாடையாலே வாடுகின்றாள் வனிதைநல்லாள்
சேடையின்றி செந்நெல்லும் விளைவதானால்
தடையில்லை தலைவாநின் தனிவாழ்விலே
விடைதருவாய் விரைவினிலே நானும்செல்ல
உரைத்திடுவேன் உள்ளத்தின் பாங்கதனை
ஊமையாய் நின்றிடல்தான் உயர்வுஆமோ?

தலைவன்

கோடைகுளிர்நிலவில் கோதையாள் கொடுத்தஇன்பம்
வாடையால் தடைபடுமோ வனிதையேசொல்
படைபலகடந்து தடைபல நீங்கியபின்
சடையினிலே மடல்சொரிய சடுதியில்வருவேனென்று
போய்சொல்வாய் தோழியேநீ நீலவேணி?

(தலைவனும் தலைவியும் சேர்ந்திருத்தலை கண்டபின்)

உலகம் உய்யுமோ?

ஒருவனும் ஒருத்தியும் ஒருமனப் பட்டபின்
ஒவ்வாத கதைபல உரைத்தே பிரிந்திட
உற்றாரும் மற்றாரும் ஊக்கம் கொள்கின்றார்
உண்மை அதுவானால் உலகம் உய்யுமோ?

காதல்

கண்ணிலே புகுந்து கருத்திலே விளைந்து
காணாது தவழ்ந்து கண்ட பின்னர்
கல்லுக்கும் சொல்லுக்கும் காவலன் காப்புக்கும்
சாட்சியாய் கனிவதாமோ காதல்

——(o)——

இரத்த தானம் வாழ்க!

"தென் குமரன்"

ஆம், எனக்கு நன்ருக நினைவிருக்கிறது அந்தக் காட்சி! நிழற் படம்போல் என் மனத்திரையில் படிந்துவிட்ட அதனை நான் எப்படி மறப்பேன்? சிதைந்துபோன என் வாழ்வைச் சீராக்கிய அந்த நிகழ்ச்சியை எப்படி நான் மறப்பேன்?

அப்போது நான் சென்னையிலுள்ள பொது மருத்துவ மனை யில் சேர்க்கப்பட்டிருந்தேன், உடல் நோயின் தீர்வுக்காக. டாக் டர்கள் எல்லோரும் எனக்கு உடம்பில்தான் கோளாறு என்று கூறி, அந்த மருத்துவ மனையில் சேர்த்துவிட்டார்கள். ஆனல் எனக்கல்லவோ தெரியும், என் உள்ளத்தில் ஏற்பட்ட கோளாறு; வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றம்; இவைதாம் என் பலவீனத் திற்குக் காரணம் என்று!

அன்றொரு நாள் மருத்துவ மனையில் டாக்டர்களும் நர்சுகளும் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தனர். பக்கத்து வார்டில் ஏதோ அவசரகேஸ் போலிருந்தது; அதனல்தான் எல்லோருடைய கவனமும் அங்கேயே இருந்தது. நான் படுத்திருந்த வார்டைக் கவனிக்க எந்த டாக்டரும் நர்சும் அக்கறை காட்டவில்லை. எனக் குப் பக்கத்தில் படுத்திருந்த நோயாளி இருமலை அடக்கமுடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். எனக்கோ தாகம் தாளமுடிய வில்லை. அந்தச் சமயத்தில் ஒரு நர்ஸ் எங்கள் வார்டினுள் நுழைந்தாள்.

"நர்ஸ்! கொஞ்சம் தண்ணீர் வேண்டும் எனக்கு!" நான் கெஞ்சினேன்.

"உனக்குத் தண்ணீர் கொடுக்க எனக்கு இப்போது நேர மில்லை! பக்கத்து வார்டில் ஒரு பெண்ணின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது; அங்கே நான் போய்க் கவனிக்கவேண்டும்!"

அந்த நர்ஸ் என் நிலையைக் கிஞ்சித்தும் எண்ணிப் பார்க்காத வளாகப் போய்விட்டாள்! எனக்கு எப்படியிருக்கும்? பக்கத்து வார்டிலிருப்பவளின் உயிரைக் காக்கவேண்டி என் உயிரை அலட் சியப்படுத்திச் சென்றுவிட்டாள் அந்த நர்ஸ்! நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் உதவி டாக்டர் எங்கள் வார்டைக் கவனிக்க வந்தார்.

எல்லா நோயாளிகளையும் பார்த்துவிட்டுக் கடைசியாக என் படுக்கைக்கு வந்து, என்னுடைய உடல்நிலைக் குறிப்பேட்டை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்குத் தண்ணீர் வேண்டும் என்கிற தேவையை அவரிடம் கூறினேன்; தண்ணீர் தரப்பட்டது; குடித்தேன்.

"டாக்டர் சார்! பக்கத்து வார்டில் ஏதோ மோசமான கேசாமே? நீங்கள் கற்ற கல்விகூடவா பயனற்றுப் போய்விடும்?'' ஆவல் பொறுக்கமாட்டாதவனுய் வினவினேன்.

"ஒரு பெண்; பாவம், தொட்டால் சிவந்துபோகும் நிறம்; தென்றல் பட்டால் ஒடிந்துவிடும் உடல்; மடிந்துபோகும் நிலையி லிருக்கிருள் அவள்! இடிந்துபோயிருக்கிறது அவளுடைய தந்தை யின் மனம்!'' அந்த டாக்டர் மிகவும் நல்லவர்; அதனுல்தான் அவர் பொறுமையுடன் பேசினுர் என்னிடம்.

"அவளைக் காப்பாற்ற முடியாதா டாக்டர் உங்களால்?''

"வியாதி சாதாரணமானதுதான்! ஆனுல் அவள் உடலி லிருந்து இரத்தம் அளவுக்குமீறிக் குறைந்துவிட்டிருக்கிறது! அவளுடைய துரதிர்ஷ்டத்தால், இரத்தச் சேமிப்பு இலாக்காவில் ஒரு துளி இரத்தமும் கிடையாது இந்தவேளைக்கு! அவள் பிழைக்க வேண்டுமானுல் உடனே இரத்தம் ஏற்றப்பட்டவேண்டும்! இரத்தம் கொடுக்கத்தான் யாறும் முன்வரவில்லை!''

"டாக்டர் சார்! ஒரு பெண் உயிருக்கு மன்ருடிக்கொண் டிருக்கிருள் என்கிறீர்கள்! நீங்கள் ஏன் உங்கள் இரத்தத்தில் சிறிது தானம் செய்யக்கூடாது?''

"நல்ல ஆளப்பா நீ! ஏன், உங்கள் உயிரைக்கொடுத்து, அந்த அந்த நோயாளியின் உயிரைக் காப்பாற்றக் கூடாதா என்றுகூட கேட்பாய் போலிருக்கிறது! சரி சரி, உன் உடம்பைப் பார்த்துக் கொள்; நான் போய்வருகிறேன்!''

அந்தச் சுயநல டாக்டர் போய்விட்டார். என் மனமோ அடுத்த வார்டைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தது!

"தொட்டால் சிவக்கும் நிறம்; தென்றல் பட்டால் ஒடிந்து விடும் உடல்!'' டாக்டரின் இந்த வார்த்தைகள் என் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.

'தொட்டால் சிவக்கும் நிறம்தான் என் நீலாவுக்கும்! தென் றல் பட்டால் ஒடிந்துவிடும் உடல்தான் என் மனைவி நீலாவுக்கும்! அரும்பு முல்லையும் குறும்பு விழியும் கரும்பு இதழும் உடையவள் தானே என் நீலா! துவளும் இடையும் பவள வண்ணமும் உடையவள்தானே என் நீலா! பிறை நிலாபோன்ற அவளுடைய நெற்றியழகை எந்த ஒரு ஓவியனும் வரைந்துகாட்ட முடியாதே! அவளைப்போன்ற ஒருவள் இன்று பக்கத்து வார்டில் இறக்கும் நிலையில் இருக்கிருள்! அவள் இறக்கத்தான் வேண்டுமா? கூடாது! அவள் வாழட்டும்! அதற்குப் பதில் நான் சாகிறேன்! அவளுக்கு நான் இரத்த தானம் செய்கிறேன்!'

என் உள்ளுணர்வு உருவெடுத்துப் பேசியது இப்படி. நான் முடிவுசெய்துவிட்டேன், இரத்ததானம் செய்வது என்று!

அப்போது தலைமை டாக்டர் எங்கள் வார்டுக்குள் நுழைந்தார். அவரைக் கூப்பிட்டு என் விருப்பத்தைக் கூறினேன். முதலில் அவர் மறுத்தார்; என் உடலிலிருந்து இரத்தம் எடுத்தால் உயிக்கே ஆபத்து உண்டாகலாம் என்றார்; நான் விடவில்லை; முடிவில் அவரைச் சம்மதிக்கவைத்தேன்!

எனக்கு மயக்கம் தந்தார்கள்; என் உடலிலிருந்து இரத்தம் எடுத்தார்கள். சில மணி நேரங்களில் என் மயக்கம் தெளிந்தது; என் அருகில், தலைமை டாக்டர் முகத்தில் முறுவலுடன் நின்று கொண்டிருந்தார்.

"மிகவும் தியாக சிந்தையுள்ள ஆளப்ப நீ! உன்னால் இன்று ஒரு பெண் பிழைத்தாள்; நல்ல காலத்தால் நீயும் பிழைத்துவிட்டாய்! உனக்கு நன்றிகூற, அப்பெண்ணின் தந்தை நின்றுகொண்டிருக்கிறார்; வரச்சொல்லவா அவரை?"

டாக்டர் இப்படிக் கேட்டார்; நான் தலையசைத்தேன். டாக்டர் போய். மற்றொருவரை உடன்கொண்டுவந்தார், நான் தலை குனிந்துகொண்டு, சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன் அப்போது.

"உங்களுக்கு என் நன்றி சார்! நீங்கள்செய்த இரத்த தானம் என் ஒரே மகளைப் பிழைக்கவைத்தது! உங்கள் மனைவியும் குழந்தைகளும் நன்றாய் வாழணும் சார்!"

இந்தக் குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தேன். எதிரே அவர்! அவர் மகளுக்கா நான் இரத்தம் கொடுத்தேன்? என் பகைவனுக்கா அருள்செய்திருக்கிறேன்? என் நினைவு ஒரு கனம் பின்னோக்கி ஓடியது.........

அன்றொருநாள். இருமலோடு போராடிவந்த என் மனைவி, திடீரென்று இரத்தம் கக்கினாள். ஏழைக் குமாஸ்தாவான என்னிடம் அந்த வேளையில் காசில்லை; எவரெவர் காலிலேயோ விழுந்து கெஞ்சிக்கேட்டேன் கடனாக! எல்லோரும் மறுத்துவிட்டார்கள்!

முடிவில், நான் பணியாற்றிய பணிமனையின் முதலாளியிடம் ஓடினேன்! காலில் விழுந்தேன்; மனைவியின் நிலையைக்கூறி மன்றாடினேன்! என் ஓலத்தைக் கேட்ட அவர் துடிதுடித்து எழுந்தார்! எனக்கு உதவிசெய்ய அல்ல; என்னை வேலையிலிருந்தே நீக்க! என் அன்பு மனைவியின் காசம் மற்றவர்களையும் பற்றிவிடும் என்று காரணம் காட்டி என்னை வேலை நீக்கம் செய்துவிட்டார் அந்த முதலாளி!

வீடு திரும்பிய நான் என் நீலாவைச் சிலையாகத்தான் கண்டேன்! ஆம், என் சொத்து செத்துவிட்டது! என் மனைவியின் ஓவியம் கலைந்துவிட்டது! எந்த முதலாளி அன்று என் மனைவியின் சாவுக்குக் காரணமாய் இருந்தாரோ, அவர்தான் என் எதிரே நின்றுகொண்டிருந்தார்! அவருடைய திருக்குமரிக்குத் தான் நான் வாழ்வு அளித்திருக்கிறேன்!

அவர் என்னை புரிந்துகொண்டதும், கால்களில் விழுந்தார்; மன்னிப்புவேண்டும் என்று மன்ருடினூர். அப்போது, அவர் பேச்சு ஏதுமே என் செவிகளில் ஏறவில்லை; விசித்திரமான இந்த உலக வாழ்க்கையை நினைத்து, வியப்புலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்!

" பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே!

பகைவனுக் கருள்வாய்!'

அமரகவியின் இந்தப் பாடலைச் சுற்றியே வளைந்து வந்தது என் எண்ணம்.

"என்னை மன்னித்துவிடுங்கள் மணி! என்னை மன்னித்து விடுங்கள்! அன்று உங்கள் மனைவியின் மரணத்திற்குக் காரணமாய் இருந்தேன் நான்; நீங்களோ இன்று என் மகளின் கண் கண்ட தெய்வமாய்விட்டீர்கள்! நீங்கள்தான் மாந்தருள் மாணிக்கம்! நீங்கள்தான் மனிதருள் தெய்வம்!"

இப்படி அவர் என் காலில் விழுந்து அழுது, விட்ட கண்ணீர் என் மனப்பளுவைக் குறைத்தது! எனக்கு ஓரளவு அமைதியும் கிடைத்தது.

அன்றிலிருந்து லீலாவின் தகப்பனுர் — அவர்தான், அந்த முதலாளி, என்னைக் குணப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டார். என்னை அவர் தம் வீட்டிற்கே அழைத்துக் கொண்டார். லீலாவின் உடல் குணமடைந்துவிட்டதால், அவளுடைய பராமரிப்பில் என் உடல்நிலை வளர்ந்தது.

என்னை லீலா அன்புடன் கவனித்து வந்தபோது என் நீலாவின் நினைவு அடிக்கடி வந்து வாட்டும்! என் நீலாவைப்போல் தான் லீலாவும் இருந்தாள்! என் நீலாவிற்கு "தொட்டால் சிவக்கும் மேனி; தென்றல் பட்டால் ஒடிந்துவிடும் உடல்" லீலாவுக்கும் இருந்தது!

'என்னிடம் ஏன் லீலா ஒட்டிப் பழகுகிருள்? உயிரளித்தவன் என்பதால் உண்டான அன்பா? அல்லது.........?' இப்படி என் மனம் அடிக்கடி எண்ணவாரம்பித்தது!

நாட்கள் என்ற படிகாரம் காலநீரில் கரைந்துகொண்டிருந்தது!

அப்போது பனிக்காலம் வந்தது. சிறிது சிறிதாக குணமாகி வந்த என் உடல் ஒருநாள் மறுபடியும் மோசமாகிவிட்டது! லீலா மனமுடைந்து தவித்தாள்!

"இவருடைய உடலில் இரத்தம் குறைந்துவிட்டது! இவர் உடலுக்குத் தேவையான இரத்தம் தந்தால்தான் பிழைப்பார்!"

டாக்டர், லீலாவின் தந்தையிடம் இப்படிக் கூறிக்கொண் டிருந்தார்; லீலா கேட்டாள்; 'ஆ.........!' என்று வாய் பிளந் தாள்; துடித்துப்போனுல்! அவளுடைய தந்தைக்கும் எனக்கும் அப்போதுதான் லீலாவின் மனநிலே புரிந்தது! இருளிலே ஒளி என்பார்களே. அதைப்போல அந்த அவல நிலேயிலும் எனக்குச் சிறிது மகிழ்வு ஏற்பட்டது! எல்லோர் கண்களும் அவள்மீது நிலேத்தன.

"டாக்டர் சார்! என் இரத்தத்தை அவர் உடலில் செலுத் துங்கள்; நான் தயார்; தயங்காதீர்கள் டாக்டர்!" முதலில் டாக்டரிடம் வேண்டுதல் விடுத்தாள்; பின் வற்புறுத்தினுள்!

'இப்போதுதான் குணமான அவள் இரத்ததானம் செய்வதா? அவளுக்காக நான் தந்ததுபோய், எனக்கு அவள் கொடுப்பதா?' நான் நீனைவை மறந்தேன்; எனக்குச் சுயநினேவே போய்விட்டது; சிலேயானேன்.

மறுபடியும் நான் கண்களேத் திறந்து பார்த்தேன். எத்தனே நாட்களாகிவிட்டனவே, நான் நினைவை இழந்து! எப்படி உயி ருடன் இருக்கிறேனே? எனக்கு வியப்பாக இருந்தது!

என் கண்கள் திறந்துகொண்டு அவளுடைய திருஉருவைத் தேடின. அப்போதுதான் அவள் தன் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள், நீர் தேங்கிய விழிகளோடு; சோகம் படிந்த முகத்தோடு!

"லீலா, நீயா எனக்கு இரத்தம் கொடுத்தாய்?"

"இல்லே; அப்பா!"

"எங்கே லீலா, அவர்? எங்கே?"

லீலா பதில் சொல்லவில்லே; விம்மி விம்மி அழுதாள்! நான் புரிந்துகொண்டேன்! எனக்காக அவர் இரத்தம் தந்திருக்கிறுர்!

"லீலா! சாகும்போது, அந்தத் தியாகமூர்த்தி என்னசொன் ஞர்? சொல் லீலா! சொல்! அவர் எண்ணத்தை நான் சத்திய மாக நிறைவேற்றுகிறேன்!"

"அப்பா உங்களேயும் என்னேயும்........." அவள் அதற்குமேல் பேசவில்லே.

லீலா! என்னிடமிருந்து பிரித்துவிட்ட நீலாவை உன் மூல மாக எனக்களித்துவிட்டாரா உன் தந்தை! இரத்த தானத்தின் அருமையை நான் புரிந்துகொண்டேன்; நீயும் உன் தந்தையும் புரிந்துகொண்டீர்கள்! இரத்த தானத்தின் பெருமையை உலகமும் புரிந்துகொண்டால்.........! லீலா! நாம் குணமடைந்தபின், நம் மால் முடிந்த அளவுக்கு இரத்த தானம் செய்வோம்! அப்போது தான் நீலாக்களும் லீலாக்களும் வாழ வழியுண்டாகும்!"

லீலா என் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். என்னுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த டாக்டர், "இதோ, நானும் போகிறேன்!" என்று கூறிக்கொண்டே, காரைநோக்கி ஓடினார், தம் பங்கைச் செலுத்த!

அன்று நடந்த இந்த நிகழ்ச்சியை இன்று நினைத்துக்கொள்ளுகிறோம் நானும் லீலாவும்! இந்த நினைவு முடிவுற்றதும் எங்கள் மனம், 'இரத்ததானம் வாழ்க!' என வாழ்த்தும்; 'ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற இரத்ததானம் செய்யமாட்டார்களா?' என ஏங்கும்!

---(o)---

வைத்தியம்

வேம்பு

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்.
[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]

தமிழ் நாட்டில் அநேக மரங்கள் உண்டு. அதில் சிறந்த மரமாகக் கருதுவது வேப்பமரமாகும். வைத்தியத் தலைப்பின் கீழ் மரத்தையும் எழுதவந்தாரே என்று வியப்புத் தோன்றலாம். அம்மரத்தின் குணத்தைச் சிறிது ஆராய்வாம்.

சில மரங்களில் சில பொருள்கள் தான் உதவும். இந்த வேப்பமரத்தில் வேர், பட்டை, இலை, ஈர்க்கு, குச்சி, தளிர், பழம், கொட்டை, வேப்பநெய், புஷ்பம், பிசின், வேப்பங்கள் முதலியதும் ஒரு உறுப்பும் தள்ளாது மக்கள் உடலுக்குப் பயன்படுகின்றது. ஆனால் வேப்பமரம் நூறு வருடத்திற்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும். குறைந்தது அருபது வருடமாகிலும் இருக்கவேண்டும். இளமரங்களால் பயனில்லை.

எல்லா வகையிலும் பயன்படுவதினாலேயே தமிழ் மக்கள் வேப்பமரத்தைத் தெய்வமாக அதாவது பராசக்தியாகப் போற்றுகிறார்கள். பெரும்பயன் அளிக்கும் மரத்தை மக்கள் யாவரும் வெட்டியழித்துவிடாமல் நன்கு பாதுகாத்து வளர்த்துவரும் பொருட்டே நம் முன்னோர்கள் இத்தகைய ஏற்பாட்டைச் செய்து வைத்தனர் என்று சொல்லலாம்.

வேப்பமரங்கள் அடர்ந்துள்ள கிராமங்களில் வேப்பங் காற்றை உட்கொள்ளுவதினால் தேகாரோக்கியமும் தூய மன முடையவராகவும் காணப்படுவர். இம்மரங்கள் மிகுதியாக உள்ள ஊர்களில் விஷவாயு சம்பந்தமான வாந்திபேதி, பிளேக், ஜுரம். வைசூரி முதலான நோய்கள் பரவமாட்டா. வேம்பும் அரசும் சேர்ந்த மரங்களைப் பெண்கள் அதிகாலையில் வலம்வருதலை நாம் பார்த்திருக்கிறோம். நாள் ஒன்றுக்கு 108 சுற்றாக ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் சுற்றிவந்தால் தேகப் பயிற்சியால் சுவாசிக் கும்போது வேப்பங்காற்றுக் கலப்பதால் இரத்த சுத்தி, சூதகப் பை வீக்கம், சூதகவாயு முதலான வியாதிகள் நீங்கி புத்திர சந்தான முண்டாகும். புத்திரப்பேறு இல்லாத இளம் பெண்கள் சுற்று வது வழக்கம்.

ஆனால் இப்போது கட்டுப்பாடு இல்லா காலத்திற்குத் தகுந் தாற்போல வயது முதிர்ந்தவர்களும், அதிகமாக குழந்தைகளைப் பெற்றவர்களும், விதவைகளும், ஆண்மகனுங்கூட சுற்றுகிறார்கள். அதற்கு வாசகர்கள்தான் பதில் கூறவேண்டும்.

அரசமரத்தின் காற்றும் கருப்பையின் நோய்களை நிவர்த்திச் செய்யும். மரத்திற்கு ஆண் தன்மையும் கற்பிக்கப்படுகிறது. தனி வேம்பின் காற்றைவிட அரசோடு சேர்ந்த வேம்பின் காற்றிற்கு விசேஷ குணமுண்டு. தெய்வீகத் தன்மையும் கற்பிக்கப்படுகிறது. ஆணும் பெண்ணுமாக சக்தியும் சிவமுமாக அரசோடு சேர்ந்த வேம்பைக் கருதுகிறார்கள். அரச மரத்தின் சிறப்பை வேண்டுழி விளக்குவாம்.

சிறு குழந்தைகளின் முகத்திற்கு நேரே வேப்பங்கொத்தை விசிறியை வீசுவதுபோல் வீசினாலும் அல்லது மந்திரம் தெரிந்து வேப்பிலை அடிப்பதன் மூலம் அதன் காற்றைக் குழந்தை உட் கொள்ளும்படி செய்வதால் அக்காற்றானது குழந்தைகளின் மனச் சோர்வு அதனால் காணும் சோகம், அற்ப ஜுரம், தோஷம் முதலியவற்றைப் போக்கிக் குதூகலத்தை யுண்டாக்குகிறது. மந் திரத்தினால் குணமுண்டு என்பதை மறக்கக்கூடாது.

அம்மை நோய் கண்டவர்களிடம் வேப்பிலையை வைத்திருந் தால் அந்நோயின் வேகம் குறைந்துவிடுவதுடன் உடம்பு எரிச்ச லும் குறைகிறது. வேப்பிலைக்கு நுண்ணிய அம்மைக் கிருமிகளை யும் அவை வியாபிக்கும்போது உண்டாகும் துர்நாற்றத்தை யும் தடுத்து, அந்நோய் மேன்மேலும் பரவாமல் செய்யும் சக்தி யுண்டு. வாந்திபேதிக்கும் இஃது உதவுகின்றது. அன்றியும் பிரசவ மான வீட்டிலும் வேப்பிலையை வைத்திருப்பதினால் கிருமிகளை நசித்துவிட சுகாதாரமாகும்.

அம்மை நோய் கண்டவருக்கு ஸ்நானம் செய்விக்கும்போது வேப்பிலையும் மஞ்சலும்சேர்த்து அரைத்து நீரில் கலக்கிக் குளிக்கச் செய்வார்கள். அதனாலேயே அம்மை நோய் குணமாகிவிடும்.

அதுவே அதற்கு மருந்தாகும். புட்டாளம்மை வியாதி நெஞ்சுக்கும் கன்னத்திற்கும் இடையே வீங்கி கொள்ளுவதாகும். அதற்கும் வேப்பிலையும் மஞ்சளும் அரைத்து மேலே பூச வீக்கங் குறைந்து விடும். அன்றியும் விரல்களில்காணும் உயிர் சுற்றுக்களுக்கும் வீக்கங்களுக்கும் கட்டிகளுக்கும் இதனைப் பற்றுப்போட குணமாகும்.

மேலும் வேப்பமரத்தைப் பற்றிப் பேசும்போது அதன் சிறப்பைக் குறிக்க ஒரு சிறு கதை இருக்கிறது. அதாவது, தெற்கே பொதியமலைச் சாரலிலே ஒரு பெரிய சிறந்த வைத்தியர் இருந்தார். அவர் பல சிஷியர்களுக்கு வைத்தியத்தைக் கற்றுக்கொடுத்துக் கொண்டுவந்தார். தன் சிஷியர்களில் ஒருவனைப் பார்த்து நீ போய் வடநாட்டில் நம் வைத்தியத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்று ஆக்ஞாபித்து ஆசீர்வதித்து அனுப்பினர் அவனும் குருநாதன் வார்த்தையைத் தட்டாமல் அப்படியே வடநாடுசென்று வைத்தியத்தைச்செய்து கியாதியோடு இருந்தான்.

அவன் சென்று வெகு நாளானது. அவன் இருப்பதும் என்ன செய்கிருனென்பதும் ஒன்றுமே தெரியவில்லை. ஆகவே, சென்றவனுடைய சிறப்பை அறிந்துவர தன் சீடர்களில் ஒருவனைப் பார்த்து நீ சென்று அவன் எங்கே இருக்கிருன், என்ன செய்கிருன் என்பதைப் பார்த்துக்கொண்டுவா எனக் கட்டளை இட்டு, ஆனல் போகும்போது நடந்தே செல்ல வேண்டுமென்றும், உனது இருக்கையும் படுக்கையும் புளியமரத்தின் நிழலிலேதான் இருக்கவேண்டுமென்றும் சொல்லி அனுப்பினர்.

சிஷியன் மிகவும் உத்தமன் குரு விசுவாசமுடையவன். சொன்னசொல் தட்டாதவன் மிக நேர்மையானவன். ஆகையால் குரு சொன்னபடி நடந்து, அவனைக் கண்டுபிடித்துவிட்டான். சந்தித்ததும், நீ யார் என்று கேட்க, சுவாமி! நான் பொதிகமலைச் சாரலிலிருக்கும் வைத்தியரின் சிஷியன் என்ருன். எங்கள் குருநாதனின் சிஷியனுக்கு இப்பேர்ப்பட்ட தொழுநோய் அதாவது குஷ்டரோகம் வருவதற்குக் காரணம் என்னவென்று வினவினன்.

சுவாமி! குருநாதன் செல்லும்போது புளியமரத்து நிழலிலேயே இருக்க வேண்டுமென்றும், அதன் விறகாலேயே சமைத்துச் சாப்பிட வேண்டுமென்றும் கட்டளையிட்டார். அப்படியே செய்துகொண்டுவந்தேன். இந்த நோய் எனக்குக் காணப்பட்டதென்று கூறினன். இதையுணர்ந்த மூத்த சிஷியன் குருநாதன் நம்மை அறியும்பொருட்டு இப்படிச் செய்தனுப்பி இருக்கிருரென்று உணர்ந்து, அப்பா! நான் க்ஷேமமாகத்தான் இருக்கிறேன். குரு கட்டளைபடி நானும் சிலருக்கு வைத்தியத்தைக் கற்றுக்கொடுக்கின்றேன் என்று சொல்லச்சொல்லி, நீர் புளியமரத்து நிழலுக்கே போகக்கூடாது. வேப்பமரத்து நிழலிலேயெ தங்கி, வேப்பங்குச்சிகளால் சமைத்து வேப்பிலை, வேப்பம்பூ, வேப்பம்பட்டை, வேப்பங்கள் முதலியவற்றை உண்டுகொண்டு செல்லுவாயாக என்று பணித்து அனுப்பினன்.

அவன் அவ்வாறே அவ்வுரையைச் சிறமேற்றாங்கிச் சிறிதும் வழுவாது நடந்து, தன் குருநாதனிடம் வந்துசேர்ந்தான். அவனைப் பார்த்து நீ யாரென்று குருநாதன் வினவினர். சுவாமி! நான் உங்கள் சிடன்தானே, என்னை வடநாடுசென்று உங்கள் மூத்த சிஷியனைக் கண்டுவரச் சொன்னீர்கள்; அப்படியே சென்று கண்டு வந்தேன் என்றான்.

அவன் பொன்போன்ற திருமேனியைப் பார்த்து வியப்புற்று நீ போய்வந்த விருத்தாந்தத்தைச் சொல்லுவாயென்று கேட்டார். சுவாமி! நீங்கள் ஆக்ஞாபித்தபடியே புளியமரத்து நிழலிலேயே சென்றேன். எனக்குக் குஷ்டரோகம் வந்துவிட்டது உமது சிஷியன் இதை விசாரித்து, வேப்பமரத்து நிழலிலேயே செல்லும்படி கட்டளையிட்டார். அந்நோய் நீங்கியது என்றான். சிஷியன் நம்மைவிடக் கெட்டிக்காரனாக இருக்கிறான் என்று குரு பாராட்டினர்.

இந்தக் கதையினால் நமக்கு என்ன தெரிகிறதென்றால் இக் கதையை உண்மையாகவே நினைக்கப்பட்டவர்கள் நினைக்கட்டும்; அல்லது கதை கதையாகவே இருக்கட்டும் அதுபற்றிக் கவலையில்லை. ஆனால் வேப்பமரத்தின் நிழலும், காற்றும், இலையும், பூவும், பிசினியும், பட்டையும், கள்ளும் உடலுக்கு நன்மைசெய்கிறது என்பது மட்டும் நன்றாக விளங்குகிறது. இதைப்பற்றி ஆராய்வாம்.

——o——

யார் பெற்ற செல்வம்!

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

16-வது சீன்

(சிவலோகபுரம் கண்மணி வீவிங் பாக்டரியில்

வேலைக்கார வீசம்பாடி காலை நேரத்தில் உட்கார்ந்து)

"வாதாடும் குறவரிட வள்ளிபங்கன்

மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே"

(என்று பாடிமுடியும் சமயம்)

(அங்கு கையில் வார்கோலுடன் வந்த வேலைக்காரி மயிலு நின்று முறைத்துப் பார்த்துவிட்டு)

மயிலு :—இந்தா இங்கே பாருங்களேன், ஏன் உடம்பு..... எப்படியிருக்கு? ஒன்றும் புரியலியா? மயிலேறும்பெருமானை வாழ்த்துறியோ?

வீசம்பாடி :—இதேதடி வம்பாயிருக்கு?

மயிலு :—இந்தா என்ன டா, டீ போடுறே?

வீசம் :— ஆமாமா! மறந்திட்டேன் முன்னியே சொல்லிருக்கே போகட்டும். நான் பாட்டு பாடிக்கிட்டிருந்த ஒனக்கென்ன? அங்கேருந்துவந்து உடம்பு எப்படியிருக்குன்னு கேழ்க்குறியே?

மயிலு :—கேக்காமே என்னபண்றதாம், என்னைப்பத்தி பாடினதிலை தான் கேக்குறேன்! அடடா கோபம் மூக்குக்கு மேலே வருதே?

வீசம் :—ஆமா தாயி அந்தக் கையிலேருக்குற மயில் தோகை யை மூளையிலே சாத்திவச்சிட்டுவந்து செத்தே ஜாலியா, பேசிக் கிட்டு இரேன்!

மயிலு :—என்ன ஜாலியா? ஆமா அது எப்படியிருக்கும்?

வீசம் :—நம்ப அய்யாவூட்டு தோட்டக் கிணத்துலேயிருக்கும் வாளியாட்டம் கொக்கிமாட்டியருக்கும் இப்பதெரியுதா?

மயிலு :—அது எப்படியிருந்தா எனக்கென்ன!

வீசம் :—அப்படிச் சொல்லப்படாது மயிலு ..... ஜாலின்னு எப்படிதெரியுமோ! தொட்டா ஷாக்கடிக்கும்; தூர இருந்தா கரண்டுமாதிரி இருக்கும்; அவ்வளவு சக்தியிருக்கு அந்த ஜாலிக்கு!

மயிலு :—ஓகோ! அப்படிங்களா? சரிதாங்க அப்போ நான் வர்றேன்.

வீசம் :—அட சர்தாம்இரு! கொஞ்ச நேரம் கழிச்சிபோயிட் டாப்போவுது பறக்குறியே கிடந்து?

மயிலு :—ரக்கை ஒன்றும் மூளைக்கிலே பறக்குறதுக்கு! ம்... ...விஷயத்தே சொல்லு?

வீசம் :—இந்தாபாரு மயிலு! நீ அய்யாவூட்டுக்கு வேலைக்கு வந்து இன்னையோட சரியா அம்பத்தி ஏழுநாளாவுதே நம்பகிட்ட ஒரு நாளாவது ....

மயிலு :—கண்டிச்சி பேசலேனுதானே சொல்றே? ம்..... சர்தான்! இப்பதான் அய்யாவுக்கு ஆரேமுக்காலும் அரையும் காலும் அழுத்தமாப் பிடிக்கப்பாக்குது!

வீசம் :—அடடே இதென்ன புதுமாதிரியான கணக்கு? ஏன் மயிலு இது எந்த காலேஜ் கணக்கு?

மயிலு :—இது வில்லேஜ் கணக்கு. உங்களுக்கு மூளைரொம்ப வேலை செய்யுதுங்க!

வீசம் :—பின்னே என்னவாம்?

மயிலு :—தெரியும் தெரியும். அந்த ஏழரை நாட்டான்தான் இப்போ கெட்டியாப் பிடிச்சிருக்கான் உங்களை!

வீசம் :—அப்படின்னு பரவாயில்லியே! எனக்கு மந்திரி பதவி யாவது கிடைக்கும். அப்புறம் நீ ....

மயிலு ;—ம் .... ஏன் நிறுத்திட்டிங்க என்னை மந்திரி மனைவியின்னு மாலைபோட்டு வரவேற்பாங்க மாதர் சங்கத்திலே அப்படித்தானே ?

வீசம் :—உன்னைச் சொல்லிப்பயனில்லை. ஏழுறை நாட்டான் னியே அந்த நாடு எதுகிட்டேயிருக்கு ?

மயிலு ;—ஆத்துக்கு அக்கரையிலே இருக்கு போய்வாங்க.

வீசம் :—ஏன் உனக்கு இவ்வளவு கோபம் வருது, கேட்டா சொல்லேன் மயிலு !

மயிலு ! இந்தா பாருங்க உங்க மண்டையிலே சுத்தமா ....

வீசம் :—மூளையில்லே களிமண்ணு தானிருக்குன்னு சொல் லேன் ! இதேபார் மயிலு .... அந்த களிமண்ணுக்கும் ஒரு தடவை, ஏகப்பட்ட டிமாண்டு ஏற்பட்டதே தெரியுமா? எப்பவும் சொல்றேன் களிமண்ணை கேவலமா எண்ணாதே ஆமா.........!

மயிலு :—ஆமாமா நீங்க தான் பெருமைப்பட்டுக்கணும் ! திண்ணையில் தூங்கினவனுக்கு திடுக்கென்று ஏற்பட்டதாம் திரு மணம்! அப்படிங்கற கதையா! முச்சந்திக்கு முச்சந்தி களிமண்ணை காயவச்சி உடைக்கப்போவ, இண்டு இடுக்குலே சந்து பொந் துலே இருந்த பிள்ளையாருக்கெல்லாம் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா ? உங்க வம்சத்தாரெல்லாம் நல்லாருக்கணும் அப்ப டின்னு பிள்ளையார்களெல்லாம் ஒன்றுகூடி பெருமைப்பட்டிருப் பார்கள் உங்களைப்பற்றி இல்லிங்களா ?

வீசம் :—அடேயப்பா! அண்ட நாட்டுக்காரனெல்லாம் அண்ட முடியாதபடில்ல அறிவு வளர்ந்திருக்கு நம்ப நாட்டுலே! ம்......... மயிலும் உன்கிட்டியும்......சரக்கு ரொம்பதானிருக்கு ?

மயிலு :—இந்தாங்க பார்த்துப் பேசுங்க ?

வீசம் :—அடடே! இதுவரையிலும் உன்னை பார்க்காமேதான் பேசினேனு ? சரி, நீ என்னையே பார்த்துக்க.

மயிலு :—என்ன உங்களையே பார்த்துக்கறதா ?

வீசம் :—சேச்சே ! நான் சொல்றேன்னு நினைச்சிடாதே ?

மயிலு :—ஊஹும் ! அப்படி நான் கெட்டுப்போறவளாயிருந் தால் இன்னேரம் ஏழடுக்கு மாடியிலே எவ்வளவு சுகமாயிருப் பேன் தெரியுமா !

வீசம் :—தேவலாமே ! ரொம்ப நல்லதே !

மயிலு :—என்ன சொன்னிங்க ?

வீசம் :—இல்லே......உன் முகமே சொல்லுதே ! அப்படி போமாட்டேன்னு.

மயிலு :—ம்......ம்......இப்பதான் நெருங்கிப்பேச ஆரம்பிக் கிறீங்க ! போகப்போக ....

விசம் :—அப்படின்னு எவன் சொன்னுன் ?

மயிலு:—பொழுதைப் போக்கவேண்டாம்-பார்த்துப்பேசுங்க? டபுளயிடியா வேறல்ல தடுமாறுது? இந்தா பாருங்க, தடுக்கி விடப்போவுது!

விசம் :--ம்......போறியா........பார்த்து நடந்தாபோவுது! ம்......மகாதேவா! ஆண்டவா! ஆபத்பாந்தவா! அரிநாராயணு! நீதான் துணை!

மயிலு :—ஏன் இவங்கெல்லாம் உனக்கு சிநேகிதர்களா ஏங்க?

விசம் :—துணை புரியுறவங்கடியம்மா, துணைபுரியுறவங்க தெரியுதா? அது போகட்டும்.........இங்கே பார் மயிலு! உன் சொந்த நாடு ஊர் எது? ம்........அன்னைக்குச் சொன்னே! அதுக்குள்ள மறந்துடுச்சி! (என்று தலையில் விரலைவைத்து நோக்குதல்).

மயிலு:—மறக்கும் மறக்கும் ஏன் மறக்காது? மனிதர்களுக்கே இப்போ மறதி அதிகந்தானே? எதுக்குச் சொல்றேன்னு?......... ....இப்போ நம்ப நாட்டிலே, பங்குபோடுற புத்தி பரவிகிட்டு வர்ரதினுலே மறதி ஏற்பட மகாதேவனையா கேட்கணும்?

விசம் :—எல்லை எந்த பக்கமிருக்குன்னே தெரியலே, அதுக்குள்ள........எங்கியோ கொண்டுபோய் நிறுத்துறியே?

மயிலு :—தொல்லை ஏற்பட்டுடப் போவுதுங்க! அது முத்துறதுக்குள்ள நம்ப ஊர் முனீஸ்வர வைத்தியர்கிட்டயாவுது, ஐயனுர் வைத்தியர்கிட்டயாவுது முக்காலணு மாத்திரை இருக்கும். அதுலே ஒன்னுவாங்கி முக்கி முரண்டி வெடுக்குன்னு முழுங்கிடுங்க எல்லாம் சரியாபோயிடும்!

விசம் :—ஆமாமயிலு! நானும் கைலங்கிரியைப் பார்த்ததேயில்லே. முக்காலணு செலவிலியாவுது கைலாசத்தைப் பார்த்துட்டு கண்ணையாவுது மூடுறேன்!

மயிலு :—இந்தா பாருங்க! ஒங்களுக்கு ஒடம்பே சரியில்லே போலிருக்கு!

விசம் :—எனக்கு நல்லபடியா போகனும்ன்னு, ஒருஜினல் டானிக்கா ஒரு பாட்டல் வாங்கியாடி மயிலு. என்னு?

மயிலு :—டூப்ளிகேட்டும் இருக்குன்னு சொல்லுங்க? ம்...... என்னைக்கிருந்தும் ஒரு நாளைக்கு வாங்கியடிக்காமலாப் போப் போறேன்!

விசம் :—அடிக்கிறதே அடிக்கிறே! பார்த்து அடி தாயே? கலங்கிடப்போவுது!

மயிலு :—பார்த்தியா பார்த்தியா! நம்பகிட்டியே.,..... போட்டுகாட்டுறியே?

வீசம் :—ம் போறியா ...நீ யென்னு பொறியுருண்டே அப்பத் தானே என்னைப்பற்றி நல்லா புரிஞ்சுக்குவே நீ!

மயிலு :—ஆமா! இதுவரைக்கும் புரிஞ்சிக்காமே இன்னமே தான் புரிஞ்சிக்கப் போறேனுக்கும்! போறியா......!

வீசம் :—இல்லே இல்லே இந்த அம்மாகிட்டே தான் அளந்து காட்டப்போறேனுக்கும், ம் . . . இந்த வீசம்படியை என்னுன்னு நினைச்சே மயிலு?

மயிலு :—நினைப்பது வேற! இனிமே நடக்கப்போறது தான் புதுசு.

(கைகோத்தபடி இருவரும் உள்ளே போதல்)

17-வது சீன்

கண்மணி வீவிங் பாக்டரியில்

குமார் :—வீசம்படி இன்று தபால்களெல்லாம் வாங்கிவந்து விட்டாயா? எங்கே?

வீசம் :—இதோ மேஜை மேலிருக்கிறதுங்க!

குமார் :—(ஒரு கவரை எடுத்துப் பிரித்துப்பார்த்துவிட்டு) என்னங்க! கணக்கப்பிள்ளை கதிர்வேலய்யா! இந்த வியாபாரி சரக்கு அனுப்பச்சொல்லி அடிக்கடி தபால் போட்டுகிட்டிருக்கிறாரே உடனே அனுப்பிவைப்பதுதானே?

க. கதிர்வேல் :—ஸ்டாக்கில்லையே தம்பி! கையில் சரக்கிருந்தால் டக்குன்னு இந்நேரம் ஒரு டஜன் பேல் தள்ளிவிட்டிருக்க மாட்டேனா? என்னசெய்கிறது. இன்னும் ரெண்டு நாளாகும். சரக்கு தயாரானதும் தான் அனுப்பிவைக்கணும் தம்பி!

குமார் :—சரி இப்பவே அவருக்கு ஒரு தபால் போட்டுடுங்க.

க. கதிர் :—அப்படியே தம்பி!

குமார் :—என்னுங்க மானேஜர் ஸார்! பாக்டரி ஆட்களெல்லாம் ரொம்ப லேட்டஸ்ட்டா ஒர்க்கு பார்க்குறுங்கபோலிருக்கு?

மானேஜர் கனகராஜ் :—நோ நோ ஸார்!

குமார் :—பின்னே சரக்கு டிலேயாகக் காரணம்?

மா. கனக :—ஒர்க்லே மட்டும் கம்ப்ளீட்டா குற்றங்குறையேயில்லே ஸார்!

குமார் :—தாங்க்ஸ்; டியூட்டி கரெக்ட்டாயிருந்தா சரி!

மா. கனக :—வெறி கரெக்ட் ஸார்! மார்னிங் போரோக்ளாக்! ஈவினிங் போரோக்ளாக்! புல்ஒர்க். கரெக்ட் ஸார்!

குமார் :—சந்தோஷம்! மானேஜர் ஸார்! இந்தாண்டு நம் தொழிலாளர்களுக்கு இந்த மாத சம்பளத்தோடே இரண்டு

மாதம் பேமண்ட் போனஸாகக் கொடுத்துவிடும் தெரியுதா? என்ன கதிர்வேலய்யா புரியுதுங்களா?

க. கதிர் ;—ஆஹா! பேஷா!

மா. கனக:—தங்களிஷ்டப்படியே ஆகட்டும் ஸார்!

வீசம்:—(குறுக்கிட்டு) ஸார் . . . . . எனக்கும் . . . .

க. கதிர்:—(சிரித்தபடி) அதானில்லே வீசம்படி உன்னைத் தவிர!

மா. கனக:—மற்றவர்களுக்கெல்லாம் உண்டு வீசம்படி!

வீசம்:—(விசனப்பட்டவனய்) அடபரமதயாளா! என்னை ஏன் படைத்தாய்? என்னையும் ஒரு தொழிலாளியாய்ப் படைத்திருக்கக்கூடாதா? படும் அவஸ்தையைப்பட்டு சுகப்படுமிடத்தில் சுகமுடனிருப்பேனே! ஏ பரந்தாமா! என்னை ஏன் ஒரு வேலைக்காரனய்ப் பிறப்பித்தாய்? இரண்டு மாத சம்பளம் அனுவசியமாய் எனக்குப போகுதே! என்செய்வேன் ஈசா!

குமார்:—(சிரித்தபடி கிட்டவந்து) சபேசாவை மறந்துவிட்டாயா வீசம்படி? வேடிக்கையாக இருக்கிறதே உன் வேண்டுதல்? வீசம்படி! விளையாட்டுக்காகச் சொன்னர்கள் வேதனைப்படாதே!

வீசம்:—சோதனையான கட்டம் ஸார் இது!

குமார்:—ஆம்! பரிசோதனை பண்ணினர்கள். நீ கவலைப்படாமலிரு. உனக்கும் உண்டு போனஸ்!

வீசம்:—நல்லவேளைங்க! மூச்சே நின்னுடும்போல இருந்தது! அவங்க சொன்னது.

குமார்:—(சிரித்தபடி) இப்போ நான் சொன்னது?

வீசம்:—கல்லாறு, முள்ளாறு, அக்கினியாறு! எல்லாவற்றையும் தாண்டிப்போய் சத்தியவான் உயிரை சாவித்திரி மீட்டுவந்த கதையாக ஆகிவிட்டது ஸார்! ம் . . . . . எனக்கும் போன உயிர்தான்.

குமார்:—என்னல் மீண்டுவந்தது என்று சொல்லு?

வீசம்:—ஆமாம் ஸார்! சத்தியவான் உயிரை மீட்டது சாவித்திரி. அதேபோல இந்த வீசம்படி உயிரை மீட்டது தாங்களல்லவா?

குமார்:—சரிதான். மானேஜர் கனகராஜ் எமனகவும், கணக்கப்பிள்ளை கதிர்வேலய்யா சித்திராபுத்திரராகவும், உனக்கு மாறிவிட்டார்கள். ம் . . . . இல்லையா?

வீசம்:—(திரும்பிப்பார்த்துவிட்டு) ஸார் அதோ இரண்டுபேர் நம்ப பாக்ட்ரியை நோக்கி வருகிருர்கள். அதில் ஒருவர் பெண் மாதிரி இருக்கிருர் ஸார்!

(நடனமங்கை நளினுவும், நண்பன் மோகனும் உள்ளே வருதல்)

குமார் :—(வருபவர்களை வரவேற்று) வாருங்கள் ஸார்! வாருங்கள்! டேய் விசம்படி அந்த நாற்காலியை.......

மோகன் :—தாங்க்ஸ் ஸார்!

நளினு :—வணக்கம் ஸார்!

குமார் :—வணக்கம்! என்ன விஷயம்? தாங்கள்.......?

மோ :–பக்கத்து ஊர்தான் ஸார்! உங்களிடம் ஓர் உதவி நிதிக்காக.........?

நளினு :—எஸ் ஸார்! நாளை எங்களூரில் தமிழரசு கிளப்பின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா நடைபெறப்போவதால் அதற்குத் தாங்கள்........

மோ :—நிதி உதவிசெய்வதுடன் நாளை நடக்கப்போகும் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி.,.....

நளினு :—நடத்திக்கொடுக்க வேண்டுமென்பது எங்கள் அவா!

குமார் :—ஓகோ! ஏதோ என்னல் இயன்ற அளவு தமிழரசு கிளப்பிற்காக உதவியளிக்கிறேன். ஆனு? தலைமை தாங்க வேறு யாரையாவது............

மோ :—அப்படிச் சொல்லப்படாது ஸார்! இவங்க தான் ஸார் தமிழரசு கிளப்பின் தலைவி! பெயர் நளினு! நாளை நடக்கப் போகும் ஆண்டு விழாவில் டான்ஸிங் பார்ட்டிக்கும் ஏற்பாடு செய்து அதிலும் இவர்கள் பங்கெடுத்துக் கொள்கிருர்கள் ஸார் தாங்கள் அவசியம்.........

குமார் :—(சிரித்தபடி) வரத்தான் வேண்மென்கிறீர்களா? வருகிறேன் ஆனு......, என்னை பேச்சாளனென்ற முறையில் தலைமை வகிக்கச்சொல்வது தான் பிடிக்கலே ஸார்!

மோ :—(சிரித்தபடி) நீங்கென்னு ஸார்! இந்தக் காலத்திலே தலைமைப் பதவிக்குத் தடுக்கி விழுமளவுக்குக் க்யூ வரிசையில் காத்திருக்கிருர்கள்.....நீங்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கா ஸார்?

குமார் :—(தலையை ஆட்டியபடி) என்னமோ ஸார்! அதெல்லாம் எனக்கு அறவே பிடிப்பதில்லை. வேண்டுமானுல் ஆண்டு விழாவிற்குமட்டும் வந்து போகிறேன்.

மோ :—தலைமைப் பதவியென்ருல் பெரியதாக நினைத்துவிடாதீர்கள் ஸார்! ஏதோ இடையிடையே எழுந்து இரண்டொரு வார்த்தை அவ்வளவு தான்!

நளினு :—ஆமாம் ஸார்! பேச்சாளராக, சிங்கப்பட்டி செல்வந்தர் செங்கல்வராய பக்கரின் தங்கை மகனை ராஜா அவர்களை நியமித்திருக்கிருேம்!

குமார் :—என்ன? ராஜாவா! அந்த ராஜா எப்போவந்தான்? எங்குத் தங்கியிருக்கிறன்?

மோ :—நம் வீட்டில் தான் ஸார்! ஆமாம் அவரை உங்களுக்கு ரொம்ப தெரியுமாமே?

குமார் :—ஓ! நன்ருகத் தெரியும் ஸார்!

மோ :—மற்ற விபரங்கள் பூராவும் உங்களைப்பற்றி சொன்னுர் ஸார் ராஜா! அவர் வெளிநாட்டிலிருந்து வந்ததுமுதல் நம் வீட்டிலேதான் தங்கியிருக்கிருர். என்னமோ அவர் மாமா பேரில் கோபம் போலிருக்கிறது. போவதே கிடையாது,

குமார் :—அடடே! எனக்கு தெரியவே தெரியாதே? சரி, அப்படின்னு அவசியம் வருகிறேன்!

நளினு :—மறந்துவிடாதீர்கள் ஸார்! அவசியம் . . . . . , ?

மோ :— ஆம் ஸார்! ஆண்டு விழாவின்போது தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்களின் திருஉருவப்படத்தைத் திறந்து வைப்பதோடல்லாமல், மேல் நாட்டு பழக்கவழக்கங்களைப் பற்றி சுருக்கமாக விளக்கிக் கூறுவீர்களென்ற முறையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம் ஸார்!

குமார் :— அப்படியா! நான் பெரும்பாக்கியம் செய்தவன்தான்! தமிழகச்செல்வர் தமிழரசு கழகத்தின் தந்தை ம. பொ. சி. அவர்களின் உருவப்படத்தைத் திறப்பதற்கு என்னை ஏற்பாடு செய்ததற்கு என் உளம்கனிந்த நன்றி!

மோ :—(நளினுவைப்பார்த்து) ஏன் நளினு . . . . ம் . . . . , • ஸாரிடம் . . . . , . . . !

நளினு :—ஓ...ஐ...ஸி! மறந்துவிட்டேன்!

(என்று சொல்லியபடியே கையிலுள்ள பையைத் திறந்து டிக்கட் புக் ஒன்றை எடுத்து நீட்டுதல்)

(குமார் டிக்கட் புக்கைக் கையில்வாங்கி நூறு ரூபாய் டிக்கட் ஒன்றைக் கிழித்துக்கொண்டு விடை கொடுத்தனுப்புதல்.)

—(o)—

இன்பவாழ்க்கை

திருமணம்

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்
(75, நைனியப்பன் தெரு, சென்னை-1)

திருமணம் செய்துகொள்ளுதல் நம் தமிழ் நாட்டிற்கு மிக முக்கியமானது. அந்தத் திருமணத்தில் மணவறையில் வைக்கப் படும் சில சடங்குகள் அவசியமானது. அவற்றுள் திரிமூர்த்தி களுக்குக்காப்புக்கட்டி, பார்வதி பரமசிவமாக இரண்டு குடங்களை வைத்து, மற்றதை முப்பத்துமுக்கோடி தேவர்களாகக் குறிப்பிட்டு பூமாதேவி, அக்கினி தேவன், ஆகாயவாணி, பந்துமித்திரர்கள் எல்லோரையும் சாட்சி வைப்பதாகும். இது நான் இவளைவிட்டுப் பிரிவதில்லை, நான் இவனைவிட்டுப் பிரிவதில்லை என்ற ஒரு உடன் படிக்கையை வலியுறுத்த மக்கள் மனப்பான்மைக்குத் தக்கவாறு ஏற்பட்டச் சடங்காகும்.

ஒருவரையொருவர் விட்டுப் பிரியாதிருக்கத் தெய்வங்களையும் பந்துக்களையும் சாட்சியாக வைக்கும் சூட்சியே தவிர அறிவுடை யோருக்கு வேறென்ன பொருளிருக்கிறது. வீதிவலம் வருதல் (ஊர்க்கோலம்) கூட அந்தக் கருத்துத்தான். இவனுக்கு இவள் மனைவியென்று ஊரறியக் காட்டுவதாகும். மற்ற நாடு களிலே மனைவியும் புருஷனும் இஷ்டம்போல் பிரிந்துகொள்ள லாம். ஒரு சிறிய காரணம் காட்டிவிட்டால் போதுமானது. அதாவது சிகரெட் அதிகம் பிடிக்கிறார் அல்லது சீட்டுக்காகிதம் ஆடுகிறார் என்று காரணம் காட்டிவிட்டால் போதுமானது. ஆனால் அந்த வழக்கத்தை நம் தமிழ் நாட்டிற்கும் கொண்டுவர உள்ளீடாக முயற்சிசெய்கிறார்கள். அது முற்றிலும் பொருந்தாது.

திருமணக் காலத்தில் மொழி ஆசீர்வாதம் செய்வதுபற்றிச் சிந்திக்கவேண்டி இருக்கிறது. அதாவது, மொழிதல் நல்ல வார்த் தைகளைக் கூறுவது. இதனால் நன்மை ஏற்படும். அந்த நன்மை விரைந்தும் பொறுத்துமுண்டாகும். அதன் பயனாகப் பொருளைக் கொடுத்து மொழிந்தார்கள். அதனை ஒரு சிலர் மொய் என்றுங்கூறு வர். மொழி வைத்துக்கொள்ளுவதினாலே ஒரேயொரு நன்மைதான் இருக்கின்றது. அதாவது சாதாரண குடும்பமாக இருந்தால் அந்தச் சமயம் செலவிற்கு ஒத்தாசையாகும், இந்த ஒரு நன்மைக்கு அநேக கெடுதல்கள் இருக்கின்றன. குடும்பம் சௌகரியமாக இருக் கும்போது அதற்குத் தகுந்தபடி மொழிசெய்கிறான்; பிரயோசனக் காரனும் ஏற்றுக்கொள்ளுகின்றான்.

ஒரு சமயம் அவனது வாழ்க்கை மாறுபடுமேயானுல் முன் செய்த மொழியாளருக்குத் திருப்பிச்செய்ய வருந்துகின்ருன். அன்றியும் முன்செய்த ஆடம்பர வாழ்க்கையை நினைத்துத் துக்கப் படுகின்ருன். மொழிசெய்ய சந்தர்ப்பம் நேர்ந்தபோது தப்பித்துக் கொள்ள பிரயோசனத்திற்கு வராமலுங்கூட நின்றுவிடுகின்ருன். கடன் பட்டாகிலும் பண்டம் பாத்திரங்களை விற்ருகிலும் செய்யத் துணிகின்ருன். மொய்க்கடனைத் தீர்க்க வேண்டி மனம் புண் படுகின்றது. வறுமை இடந்தராமையால் மனைவி அணிந்திருக் கும் அற்ப நகையையும் ஈடுவைக்க முற்படுகின்ருன், மனைவி கொடுக்கச் சம்மதமின்றி குடும்பத்தில் வாழ்க்கை கலகப்பட்டு நிலைகுலைகிறது.

மேலும் மனைவிமார்கள் வேறு கடனுக்குக் கொடுத்தாலும் கொடுப்பார்களே தவிர இந்தக் கலியாண மொழிக்கடனுக்கு முழு மனதுடன் கொடுக்கப்பட்டவர்கள் இருப்பார்களென்பது மிக அரிது. சுப கடிதத்தைப் பார்த்து மொழிசெய்ய வேண்டுமென்று ஏற்பட்டால், செல்வந்தர்களாயினும் சாதாரணமானவர்களாயி னும் சந்தோஷத்தோடு எண்ணிச் செய்கின்ருர்களா என்ருல் இல்லை.

பத்திரிகையைப் பார்த்ததும் இஃதொரு தெண்டம் என்றும் செலவு வந்ததென்றும் பலவாருய்க் கூறுகிருர்கள். நூற்றுக்குப் பத்துப்பேர்கூட சந்தோஷமாகச் செய்யப்பட்டவர்கள் இருக்க மாட்டார்கள் என்பது உண்மை.

நம்முடைய சுபசடங்கு அவனுக்குத் துன்பமாகவும் தொல்லை யாகவும் இருக்கிறது. அதற்கு இந்த மொழிதானே காரணம், இஃதேதோ யூகித்தெழுதியதன்று. மேல் கீழ்வரையிலும் மக்க ளிடையே கலந்துகண்ட அனுபவத்தைக் குறிப்பதாகும். ஒரு சிலர் மொழியையே வருவாயாகக்கொண்டு வாயினல் சர்க்கரைப் பந்த விட்டு தனுக்கு வார்த்தைகளைப்பேசிக் கவர்ச்சியாக அபிநயங்களால் மொழியைப் பெற்றுக்கொள்ளுகின்ருர்கள்.

அப்படியே பிறருக்குச்செய்ய நேர்ந்தால் அந்தப் பிரயோ சனங்களுக்குப் போகாமல் அலுவல்கள் கழிந்த பிறகு காரிய வீட் டாருடன் பேச நேர்ந்தால் மிகச் சாமர்த்தியமாக உங்கள் அலு வலுக்கு உடனிருந்து அனுபவிக்கக் கொடுத்துவைக்காத பாவியா னேன் என்றும் அப்போதுதானே அந்த அவசர வேலை வந்ததென் றும் தன்னை நிந்தித்துக் கொள்ளுவதுபோல் பாசாங்கு காட்டிவிடு கிருர்கள். இப்படிச் செய்வதை எதிரி உணரமாட்டா னென்பது அவர்கள் கருத்துப்போலும்.

அன்றியும் மொழி செய்த பிறகு சாப்பிடுவது கூலிபோலவும் சத்திரம் போலவுமாகிறது. பலர் பேசிக்கொள்ளுவதைப் பார்க் கின்ருேம் ஒரு ரூபாயாவது மொழி எழுதாமல் அவன் சோற்றை எதற்குச் சாப்பிடுவது என்கிருர்கள். அப்படியானுல் மேற்சொல் லியதுதானே கருத்தாகும்.

நம்முடைய மணமக்கள் ஆசிபெற வேண்டுமானல் பிறருள்ளம் மகிழவேண்டும். அப்படி மகிழ்ச்சிதருவதும் திருப்தி தருவதும் உணவு ஒன்றுதான். அந்த உணவு இன்பந்தரும் உணவாக திருப்திகரமாக அளிக்கவேண்டும். வந்தவர்கள் உண்டு நல்ல சாப்பாடென்று மகிழ்வதே மணமக்களுக்கு ஆசியாகும். மேலும் சுபகாரிய வீட்டார் பந்துக்களுக்கும், நண்பர்களுக்கும், புரோகிதர்களுக்கும், அந்தணர்களுக்கும், ஏழைகட்கும் சந்தோஷம் விசாரிக்கக்கூடிய நிலையில் நடந்துகொள்ள வேண்டும்.

மொழியை ஒரு சிறிய அளவிற்கு ஏழை பொருளாளி என்கிற வேற்றுமை இல்லாமல் ரூபா ஒன்று அல்லது இரண்டு வைத்துக் கொள்ளலாமே என்ருல் அதுவும் தடை செய்கிறது. திருமண காலத்தில் காகிதம் பென்சில்கொண்டு பெயர்களை எழுதுவது முற்றிலும் கூடாதென்பது எமது கருத்தாகும்.

ஆனல் சுபகாரிய வீட்டுக்காரனுக்கு உதவிசெய்ய வேண்டுமேயானல் சன்மானமாக அதாவது வெகுமானமாக (Presentation) வேண்டியது ரூபாயாகவோ, துணியாகவோ, நகையாகவோ, பாத்திரமாகவோ, புஸ்தகமாகவோ வழங்கலாம். ஆனல், திரும்பி வரும் அல்லது திருப்பி நமக்கு அவர்கள் செய்வார்களென்ற எண்ணம் கிஞ்சித்தும் இருக்கக்கூடாது.

இதனைப் புத்தகங்களில் எழுதிவைக்க வேண்டியதுமில்லை மொழி செய்யப்பட்டவர்கள் செய்யலாமென்று சபையைப் பார்த்துக் கூப்பிடவேண்டியதுமில்லை. நெருங்கிய உறவினர்கள் கடமையாக மரியாதை செய்துகொள்ளுவதைத் தடுக்கவுமில்லை, இதனை வாசகர்கள் ஆழ்ந்து சிந்தித்து நடைமுறையில் கொண்டு வருமாறு வேண்டி இதோடு நிறுத்துகின்றேன்.

"தேசிங்கு ராஜன்"

(ஆக்கியோன் திரு. கண்ணு நா. அரங்கன், சின்னசீரகப்பாடி)

காட்சி 3

இடம் :—அரண்மனை தர்பார்! (டில்லி)

காலம் :—முற்பகல்

உறுப்பினர்கள் :—ஷா ஆலம் (டில்லி பாதுஷா), ராஜ லிங்கபாபு (அமைச்சர்), நடனமாது, கலிங்கத்து மன்னர், காவலாளிகள் சிலர்.

(நடனமாது நடனம் ஆடி முடிந்ததும் டில்லி பாதுஷா ஷா ஆலம் ஆசனத்தில் இருந்து ரசித்தவாறே)

ஷாஆலம் :---என்ன ஆட்டம்! என்ன ஆட்டம்! (பின் அமைச்சரைப் பார்த்து) அமைச்சரே ஆட்டம்?

ராஜலிங்கபாபு :—பிரமாதம்! வெகு பிரமாதம் மகாராஜா!

ஷா :--சபாஷ்! (நடன மாதைப்பார்த்து) நடன கலா இராணியே! உமது ஆட்டத்தைக் கண்டு ஆனந்தம் கொண்டோம்! வாழ்க உமது கலை! வெல்க வெற்றி! வளர்க உமது புகழ்!

நடன :—தங்கள் சித்தம்! என் பாக்கியம் பிரபு!

ஷா :—ஏய்! யாரங்கே? (என்றுகூவ, இரு காவலாளிகள் அரசன் முன்வந்து பணிந்தவாறே)

காவலாளிகள் :—மகராஜ்!

ஷா :—நமது பொக்கிஷத்திலிருந்து, இப்பெண்ணுக்கு வேண்டிய பொன்னும், பொருளும், வைரமும், வைடூரியமும் கொடுத்தனுப்பச் சொல்லுங்கள்!

காவ :—உத்தரவு மகராஜ்! (என்று விடைபெறுகின்றனர்).

நடன :—உத்தரவு அரசே! (என்று விடைபெறுகிறாள்).

ஷா :—(சிம்மாசனத்தில் இருந்தபடியே அமைச்சரைப் பார்த்து) அமைச்சரே! நீலவேணி?

ராஜ:—நமது அன்பிற்கும், ஆதரவிற்கும், அருமை பெருமைக்கும் உரித்தான நமது அசுவத்தின் பெயர் மகாராஜா!

ஷா :—(சிரித்தவாறே) ஆம்! நம் போட்டி அரங்கிற்கென பக்கிரியால் பரிசாக அளிக்கப்பட்ட நமது பரியின் பெயர் நீலவேணி! நம் ஆளுகைக்குட்பட்ட, ஐம்பத்துஆறு நாட்டுக் குறுநில மன்னர்களாலும், மற்றைய ஏனையோராலும் அடக்கி ஆளமுடியாத நமது அசுவத்தின் பெயர் நீலவேணி (சிரிப்பு) நம் மாண்பிற்கும், மங்காத புகழுக்கும் நன் மதிப்பைத் தேடித்தரும் நமது அசுவத்தின் பெயர் நீலவேணி! (சிரிப்பு) நீலவேணி (சிரிப்பு) அமைச்சரே!

ராஜ :—அரசே!

ஷா :—சீரும், சிறப்புடன் வாழும் சிற்றரசர்களை எல்லாம் வெட்கித் தலை குனியச்செய்திடும் செயல் நமது நீலவேணியால் கிடைத்துள்ளது அல்லவா அமைச்சரே!

ராஜ :—ஆம்! மன்னவா!

ஷா :—அன்னியன்மீது படை எடுக்கக் கோடானுகோடி வீரர்கள்வேண்டும்! மதில்களைச் சரிக்கக் கணக்கற்ற களிறுகள் தேவை! கோட்டைக் கொத்தளங்களைக் கைப்பிடிக்கக் குறைந்த

பட்சம் ஐம்பதினுயிரம் குதிரை வீரர்களாவது வேண்டும்! ஆனுல் இந்த டில்லி பாதுஷா ஷாஆலத்திற்கோ, அவைகள் எதுவும் தேவையில்லை. நீலவேணி பரி ஒன்றே போதும்! (சிரிப்பு) நீலவேணி பரி ஒன்றே போதும்! (சிரிப்பு) டில்லி பாதுஷா, இந்த ஷாஆலத்தை வெல்ல எவராலும் முடியாது! (சிரிப்பு) டியவே முடியாது (சிரிப்பு).

(இதுசமயம் குதிரை ஏறி குப்புற விழுந்த குறுநில மன்னர் கலிங்கத்து மன்னரை, ஒரு சில காவலாளிகள் அரசன்முன் கொணர்ந்து நிறுத்தியவாறு அவர்களில் ஒருவன்)

காவ:—மகாராஜா! இவர் நமது குதிரையை அடக்கமுடியாது குதிரைமீதிருந்து குப்புறவிழுந்த குறுநில மன்னர் கலிங்கத்து மன்னர்!

ஷா:—(ஆசனத்தைவிட்டு எழுந்தவாறு) கலிங்கத்து மன்னர்! ஓகோ! கலிங்கத்து மன்னரோ? கலிங்கத்து மன்னரே, களம் பல கண்டிருக்கிறேன்; மங்காத புகழ்படைத்த மானசீகர்களை மருண்டோடும்படி செய்திருக்கிறேன். கேவலம் உமது குதியைபைத் தான் எம்மால் அடக்கமுடியாதா,'' என்று வீராவேசத்துடன், உணர்ச்சி ததும்ப வீரமொழிகளை உமது தேமதுரத் திருவாயால் உதிர்த்துவிட்டு, ஏறுநடையிலே ஏளனமாக எம்மைப் பார்த்து எக்காளமிட்டுச் சென்றீரே! இப்பொழுது எங்கே அவைகள் எல்லாம்? (ஏளனமாக) ஓகோ! அவைகள் அனைத்தும் என் பரியின்பாற் பறிபோயிற்றுபோலும்! பாரை ஆளலாம்! ஆனுல் என் பரியை ஆள இந்த அவனியிலே ஆள்கிடையாது! கிடையவே கிடையாது! (சிரிப்பு) என் குதிரையை அடக்கி, அதற்கேற்ற வெகுமதிகளைப் பெற்றுப்போகலாம் என்ற புளகாங்கித எண்ணத்தோடு வந்த குறுநிலக் கோமான்கள் எல்லாம் இங்கே எனது கொடிய காராக்கிரகத்திலே காவற் கைதிகளாகக் கிடக்கின்றனர். நீர்மட்டும் என்ன அதற்கு விதிவிலக்கோ? (கலிங்கத்து மன்னரின் அருகில்சென்று அவரைப் பார்த்தவாறே) கலிங்கத்து மன்னரே! நீர் ஏதாவது பேசப்போகிறீரா? இல்லை இதுவரையிலும் மௌனம் சாதித்ததுபோல், இனியும் மௌனத்துடன்தான் இருக்கப் போகிறீரா? (மௌனம்) பேசமாட்டீர்! பாவம் எப்படிப் பேசுவீர்! கேவலம் நீர் குப்புறவிழுந்ததே ஓர் குதிரையினிடத்து! அதனுல்தான் உம் உள்ளம் என்னுடன்பேச மறுக்கிறதுபோலும்! (காவலாளிகளைப் பார்த்து) உம்! கொண்டுசெல்லுங்கள் இக்கோமகனைக் கொடிய காவற்கூடத்திற்கு! (என கட்டளை இட, காவலாளிகள் கொண்டு செல்கின்றனர். கலிங்கத்து மன்னர் ஆரம்பம் முதல் இறுதிவரை மௌனத்துடனே காணப்பட்டார்.)

ஷா:—(சிரித்தவாறே) வெற்றி! [illegible] வெற்றி! பெரும் வெற்றி! (சிரிப்பு) (திரை)

127255

காட்சி 4

இடம் :—மணிமண்டபம்! (செஞ்சி)

காலம் :—மாலைப்பொழுது

உறுப்பினர்கள் :—தேசிங்கு, தளபதி, இராமாபாய்

(தேசிங்கு தளபதியின் வருகைக்காகக் காத்து இருக்கிறார். சிறிது நேரத்திற்கெல்லாம் தளபதியார் வர, தளபதியைக்கண்ட தேசிங்கு)

தேசிங்கு :—தளபதியாரே! தாங்கள் இப்பொழுது தான் தலைக்கோட்டை வாயிலில் இருந்து வருகிறீரோ?

தளபதி :—ஆம் இளவரசே! நான் நேராக அங்கிருந்து தான் வருகிறேன்! தாங்கள் என்னை வரவழைத்ததின் நோக்கம் என்னவோ!

தே:—எனக்கு ஒருசில சந்தேகங்கள்! அவைகளைத் தெளிவுறத் தெரிந்துகொள்ளவே தங்களை வரவழைத்தேன்!

தள :—இளவரசே! சந்தேகங்கள் என்ன என்பதைத் தெரியப்படுத்தினால், ஏதோ என்னால் இயன்ற அளவு விளக்கம் தரத் தயாராக இருக்கிறேன்!

தே :—நமது அரண்மனையிலே முன்பெல்லாம் "சிங் சிங்" என அழைத்துவந்தார்களாமே அது யாரை?

தள :—உமது பாட்டனாரை! அவரது உண்மைப் பெயர் சூரசிங்! அப்பொழுது இருந்த அவரின் உறவினர்கள் அப்படி அழைக்க, பின்னர் அதுவே அவரது பெயராகக் கருதப்பட்டது. அவரும் இப்பொழுது இறந்து ஆண்டுகள் பல கடந்துவிட்டனவே!

தே :—அப்படியா! சரி! எனதப்பாவின் பெயர்!

தள :—தரணிசிங்!

தே :—இதில் ஒன்றும் மாறுதல் இல்லையே!

தள :—இல்லை இளவரசே!

தே :—தரணிசிங்! இது என்னப்பாவின் பெயர்! இல்லையா தளபதியாரே!

தள :—ஆம் இளவரசே! இதிலும், இன்னமும் சந்தேகமா!

தே :—சந்தேகம் தீர்ந்துவிட்டது தளபதியாரே! (சிறிது யோசித்து) தளபதியாரே! எனதப்பா எங்கு இருக்கிறார்?

(இந்தக் கேள்வி, தளபதியாரைத் தூக்கி வாரிப்போட்டதுபோல் ஆயிற்று. அவர் மௌனம் சாதிக்கவே, தேசிங்கு)

தே :—(கோபத்துடன்) மௌனம்! ஏன் மௌனம்! தளபதியாரே! கூறுங்கள் எனதப்பா எங்கு இருக்கிறார் என்பதை!

தள :—இளவரசே! நீண்ட நாட்களாக அவர் இந்நாட்டி லும் இல்லை எக்காட்டிலும் இல்லை!

தே :—அப்படி என்ருல், எங்குதான் இருக்கிருர் இச்செஞ்சி யின் மன்னர்?

தள :—அவர் உயிரோடிருக்கிருர். ஆனல், அவர் இருக்கிருர் என்பது இடைஞ்சலான கேள்வி இளவரசே!

தே :—(கோபமாக) என்ன? எனதப்பாவின் இருப்பிடத்தை நான் அறிந்துகொள்ளக் கேட்கப்படும் கேள்வி இடைஞ்சலானதா? (சோகமாக) தளபதியாரே! இரவும் பகலும் இணைபிரியாது என் அருகில் இருக்கும் எண்ணம் படைத்தவராம் எனதப்பா எனக் கேள்விப்பட்டேன்! "மைந்தன் பிறப்பான் எனக்கு, பிறந்ததும் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைவேன்" எனப் பகன்ருராம் என தப்பா! இவைகளைக் கேட்டவுடனே அவாக்கொண்டேன் அவரைக்காண! இதில் தவறென்றும் இல்லையே தளபதியாரே!

தள :—தவறெனப்பட்டதைத் திருத்தவேண்டியது என் போன்றவர்களின் கடமை இளவரசே!

தே :—என்ன! எனதப்பாவைக் காண்பது தவரு! என்ன நெஞ்சழுத்தம் உமக்கு! (கோபமாக) நீண்ட நாட்களாக அவர் இந்நாட்டிலும் இல்லை, எக்காட்டிலும் இல்லை என்ருல், எங்கு தான் இருக்கிருர் இச்செஞ்சியின் மன்னர்? தளபதியாரே! சிம் மம் எனச்சீறும் என் கேள்விக்கு எங்கே பதில்! பதில் எங்கே!

தள :—இளவரசே! சாகரத்தினும் பெரியது சாந்தம் எனத் தெரிந்திருந்தும் கோபப்படுகிறீரே?

தே :—கோபப்படாமல் பின் என்சொல்வது? நான் கேட்கும் கேள்விக்குச் சரியான பதில்கிடையாது! தளபதியாரே! (சோக மாக) என்னைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படையக்கூடிய பிதா உயிரோடிருந்தும், பார்க்கக் கொடுத்துவைக்காத பாபியா இந்த தேசிங்கு! என் தாயாரிடம்சென்று, "தாயே என் தந்தை எங்கே என்று தாராளமாகக் கேட்டால்", மகனே எதுவேண்டுமாயினும் கேள், ஆனல் அதைமட்டும் என்னிடம் கேட்காதே என்று கூறு கிருர்கள். தங்களைக் கேட்டாலோ, "தவறெனப் பட்டதைத் திருத்தவேண்டியது என் போன்றவர்களின் கடமை என்றும், சாகரத்தினும் பெரியது சாந்தம்" என்றும் சரியாகப் பேசுகிறீர்! தளபதியாரே! நான் என் தந்தையின் இருப்பிடத்தை அறிந்து கொள்ளும் காலம்....................

தள :—அதிவிரைவில் வரும்! கவலைப்படாதீர்கள்!

தே :—(கோபமாக) அதிவிரைவில்! ஆம்! எந்தக் காலம்? அந்தத் தரணிசிங்கின் மகன், இந்தத் தேசிங்கு செத்து அவனுக் கென ஆறு அடி குழிதோண்டி, அதிலேபோட்டுப் புதைத்து மண் ணேடு மண்ணுக மக்கிப்போன பின்புதான் தோன்றுமா தளபதி

யாரே! போதும் என்னைப் பரிசோதித்தது! பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை அறியாதவரா நீர்! இந்தத் தேசிங்கனின் பரம்பரை சோதாக்கள் அல்ல என்பதைத் தெரிந்திருந்தும், எனது தப்பாவின் இருப்பிடத்தை அறிவிக்க மறுக்கிறீர்! நான் ஒருவன் மட்டும் எனதப்பாவைக் காணாது தவிக்க, தாங்கள்மட்டும் உப்பரிக்கையிலே, உல்லாசத்தோடு சல்லாபமாக சதங்கை ஒலிக்க, நடனமாதர்கள் நாட்டியம்ஆட, இன்னிசை கீதம் முழங்க இனிய விருந்தைச் சுவைக்கிறீர்! அப்படித்தானே தளபதியாரே!

(இது சமயம் இராமாபாய் வந்தவாறே குறுக்கிட்டு)

இராமாபாய்:—கண்ணே தேசிங்கு! தளபதியாரிடம் தாறுமாருகப் பேசுகிருயே?

தே:—அம்மா! அப்பாவின் இருப்பிடத்தை அறிவிக்கிறீர்களா? இல்லை நானும் இவ்விடத்தைவிட்டு வெளியேறவா?

இரா:—கண்ணே! நீ தான் என் ஜீவன்! நீ வெளி ஏறிவிட்டால், பின் என் நிலைமை!

தே:—அப்படி என்ருல் அப்பாவின் இருப்பிடத்தை அறிவியுங்கள் அம்மா!

இரா:—(அழுதவாறே) உனதப்பாவுக்குச் சிறைவாசம்!

தே:—(துடிதுடித்து) சிறைவாசமா? எனதப்பாவுக்கா? இந்தத் தேசிங்கனின் தந்தைக்கா?

இரா:—ஆம்! மகனே! கடந்த பதினறு ஆண்டுகளாகச் சிறைவாசம் அநுபவிக்கிருர் டில்லியிலே!

தே:—(ஒரு கத்துகத்தியவாறே) ஆ! தளபதியாரே!

தள:—ஆம் இளவரசே!

தே:—(தேம்பியவாறே) சிறைவாசம் என் தந்தைக்கு! அதுவும் டில்லியிலே! வந்தாரை எல்லாம் வாழவைக்கும் தமிழகத்தின் கண் வீற்றிருக்கும் வீரம்சேர் செஞ்சிநாடே! உம்நாட்டானை வடநாட்டின் டில்லியிலே சிறைவைக்க, நீ எத்தனை நாட்களாகத் திட்டம்தீட்டி இக்காரியத்தைச் செய்தாய்! செஞ்சி மண்ணே! உன் வீரப்பிரதாபங்களை மண்ணேடு மண்ணுக மக்கச்செய்யவா இந்தக் காரியத்தைச் செய்தாய்! செஞ்சியிலே வீரர்கள் இல்லை என்ற எண்ணமா? இல்லை இருக்கின்ற வீரர்களை எல்லாம் கோழையாக்கவேண்டும் என்ற கோட்பாட்டினையா கொண்டிருக்கிருய்! செஞ்சியின் கோழைத் தனத்திற்குச் சாவுமணி அடிக்க செஞ்சியின் செல்வன் தேசிங்கன் கிளம்பிவிட்டான். (தளபதியைப் பார்த்து) தளபதியாரே! நான் நாளையே டெல்லி செல்லவேண்டும்! இரண களதீரரும் இந்தத் தேசிங்கனின் தன்மையை அந்தக் குறைமதியாளர் அறிய என் தந்தையை சிறை மீட்கவேண்டும்! உடனடியாகப் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் ஆகட்டும்!

இரா :—கண்ணே! "எண்ணித் துணிக கருமம்" என்ற வாக்குப்படி சிந்தனைசெய்து பின் செல்லலாமே!

தே :—அம்மா! காலம் கடத்தாதீர்கள்! நான் நாளையே டெல்லிக்குப் பயணமாகவேண்டும்!

தள :—இளவரசே! தங்கள் தந்தையை, தாங்கள் சிறை மீட்ப தென்றால் அக்கொடியவனின் குதிரையின் கொட்டத்தை அல்லவா அடக்கவேண்டும்!

தே :—அடக்குவேன் அவனி அறிய அவ்வசுவத்தின் அட்ட காசச் செயல்களை! அதுமட்டுமல்ல தளபதியாரே! அந்த ஆணவக் காரர்களின் அகங்காரச் செயல்கள் அனைத்தையும் குழிதோண்டிப் புதைக்கப் போகிறேன்! பரியின் உதவியால் பாரைஆள என்னும் பாதுஷாவின் பத்தாம்பசலித் தனத்திற்குச் சாவுமணி அடிக்கப் போகிறேன். செஞ்சோற்றுக் கடன் கழிப்பவர்கள் செஞ்சியின் செல்வர்கள்! இடியினும் கொடிய வலிவுடையவர்கள்! அவர்கள் வீரப்பிரதாபம் உடையவர்கள்! வீராங்கனைகள் என்பதை விளக்க மாக வீராவேசத்துடன் விளம்பப்போகிறேன். செஞ்சியைக் கைப்பற்ற ஏதேனும் சதித்திட்டங்கள் தயாரித்தால், டில்லிமாநகர் தரையோடு தரையாகத் தரைமட்டமாக்கப்படும் என்பதைத் தாராளமாக எடுத்தியம்பப் போகிறேன்! மேலும் செஞ்சியைப் பற்றி தாறுமாறாகப் பேசுவானே ஆனால், கொதிப்பேறி இருக்கும் செஞ்சி கொதிக்கும் ஜோதி, கொந்தளித்துப்போகாதே, அதன் கொடும்சுடரிலே, என்று கொக்கரித்து அக்கொடியவனைச் சின்ன பின்னமாக்கப் போகிறேன்!

இரா :—கண்ணே! சிறுத்தையின் முன்னே, சிறு நரியின் சீறலா!

தே :—அம்மா! தாங்கள் எதற்கும் கவலைப்படாமல், நாளை பயணத்திற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, ஆண்மையுடன் வழி அனுப்பித்தாருங்கள்!

இரா:—(தளபதியைப் பார்த்து) தளபதியாரே! நாளை தேசிங் கனின் பயணத்திற்குவேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் துரிதமாக ஆகட்டும்!

தள :—உத்தரவு! மகாராணி! (தொடரும்)

—(0)—



BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE
RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,
262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.
PHONE No. 3687.

Phone : 3165 Grams : COCHUTNI

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 பிராண்டு

உணவு தயாரிப்புகள், சென்னை-1.

ரவா தோசை பவுடர்

ரவா தோசை பவுடர்

1½ டம்ளர் தண்ணீரில் 1 டம்ளர் ரவா தோசை பவுடரை கலந்ததும் தோசை சுடலாம். உப்பு, காரம் எதுவும் தேவை இல்லை. சட்டினியும் தேவையில்லை.

சாம்பார் பேஸ்டினுல் சாம்பார் செய்ய

வெந்த பருப்பு தண்ணீரில் நபர் ஒன்றுக்கு ஒரு டீ-ஸ்பூன் விகிதம் கலந்தால் போதும். உப்பு, புளி, மசாலா முதலியவை சேர்க்க தேவை இல்லை.

ரசம் பேஸ்டு : டிடி சாம்பார் போல் தயாரிக்கவும்.

மதராஸ் கறி பவுடர் : பிரிஞ்சி, குருமா, கறி, பொரியல் முதலியவைகளுக்கு சிறந்தவை.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co., 55, Muthumari Chetty Street, Madras-1.